# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலைபேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, சித்திரை 28, ரபி: ஆகி 28 (11-5-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 41



**சுடர்** வைகாசி இதழ் தயாராகிறது!

● சித்திரை இதழ் கிடையாமல் ஏமாந்த வாசகர்கள் அனேகர். ஏமாற்றத்தை தவிர்க்க வைகாசி இதழுக்கு உங்கள் விற்பனையாளர்களிடம் இப்பொழுதே பதிவு செய்துகொள்ளுங்கள்!

எல்லா சுதந்திரன் ஏஜெண்டுகளிடமும் சுடர் கிடைக்கும்!


# சட்ட மறுப்புத் திட்டம்

# பரம ரகசியம்!

## இரண்டாயிரம் தொண்டர் ஊர்வலத்தில் பங்கேற்பர்!

### மே 21 ஹர்த்தால் எற்பாடுகளில் தமிழர் கூட்டணி சுறுசுறுப்பு!

குடியரசு அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டு மூன்றுவது ஆண்டு நிறைவுறும் நாளான எதிர்வரும் மே 22ம் நாள் யாழ்ப்பாணத்தில் தமிழர் கூட்டணி நடத்தவிருக்கும் சட்டமறுப்பு போராட்டத்துக்கான திட்டங்கள் யாவும் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன:

அவசரகாலச் சட்டவிதியை மீறும் வகையில் குடியரசு அரசியல் சட்டத்தை எதிர்த்தும் தனிநாடு முழக்கத்தை முன்வைத்தும் தமிழர் கூட்டணி அன்றைய தினம் நடத்தவிருக்கும் சட்டமறுப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத் திட்டங்கள் யாவும் இப்போது தயாராகிவிட்டன, ஊர்வலம் தொடங்கும் இடமும், கூட்டம் நடைபெறும் இடமும் இறுதி நேரம்வரை இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.

இந்தச் சட்டமறுப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அவர்கள் உட்பட கூட்டணியின் சகல பா. உ. க்களும் தலைவர்களும் பிரமுகர்களும் நிச்சயமாக பங்குபற்றவிருக்கிறார்கள் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டமறுப்பு ஊர்வலத்தில் பங்குபற்றுவதற்கென தினசரி நூற்றுக்கணக்கான இளைஞர்களும் இளம் பெண்களும் கூட்டணி அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துவருகின்றனர்.

தமிழர்களை கொத்தடிமையாக்கிடும் குடியரசு அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்ட நாளான மே 22ம் நாளையும் அதற்கு முதல் நாளான மே 21ம் நாளையும் பூரண துக்கதினமாக கொண்டாடும்படி தமிழர் கூட்டணி ஏற்கெனவே தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்

—8-ம் பக்கம் பார்க்க

# 30 பவுண் மாலை எங்கே?

அண்மையில் மட்டக்களப்பு வலையிறவு—வவுணதிவு பாலத்திற்கு அடிக்கல் நாட்டச் சென்ற அமைச்சர் மைத்திரிபாலாவுக்கு தங்கமாலை பரிசளிக்கவேண்டுமென்று கூறி—ஏழை விவசாயிகளை மிரட்டி ஏராளமான பணம் பலவந்தமாகத் திரட்டப்பட்டதா?

இந்தப் பணத்தைக்கொண்டு 30 பவுணில் தங்க மாலையொன்று செய்யப்பட்டதா?

குறித்த மாலையை தாம் ஏற்க முடியாதென்றும், அப்படி ஏற்றால் அதை இலஞ்சம் என்று மற்றவர்கள் கூறுவார்கள் என்றும் கூறி அமைச்சர் அந்தமாலையை நிராகரித்துவிட்டது உண்மையா?

அமைச்சர் வேண்டாம் என்று நிராகரித்துவிட்ட 30 பவுண் மாலையை அமைச்சருக்குத் தெரியாமலே அவரது சூட்கேசுக்குள் தாம் போட்டுவிட்டதாக அரசியல் அதிகாரத்தின் உச்சத்திலிருப்பவர் உள்ளூரில் கூறித் திரிவது உண்மையா?

உண்மையில் ஏழைகளின் உழைப்பை உறிஞ்சி எடுத்து உருவாக்கப்பட்ட அந்த மாலைக்கு என்ன நடந்தது?

அந்த மாலை இப்போது எங்கே? அமைச்சரிடம் போய்ச் சேர்ந்துள்ளதா? அல்லது உள்ளூர் அரசியல் அதிகாரம் அபேஸ்செய்துவிட்டதா?

—மட்டக்களப்பு மக்களிடையே இப்போது அடிபடும் இலட்ச ரூபா கேள்விகள் இவைதாம்!

# தமிழ் இளைஞர்கள் மீது பொலீசார் வேட்டை!


குடியரசு எதிர்ப்பு நாள் நெருங்க நெருங்க மட்டக்களப்பு பகுதியில் பொலிசாரின் கெடுபிடி அதிகரித்து வருகிறது. மட்டக்களப்பில் தமிழர் கூட்டணியை சேர்ந்த தமிழ் இளைஞர் பேரவை வாலிபர்கள் மீது வெறித்தனமாக இப்போது அவர்கள் வேட்டை நடத்தத் தொடங்கியுள்ளனர்!

மட்டக்களப்பில் தமிழர் விடுதலை இயக்கத்தில் தீவிரமாக இயங்கிவரும் தமிழ் இளைஞர்கள் மீது இப்போது பொலிசார் வலை விரித்துள்ளனர். பஸ் பெயர்ப் பலகையொன்றில் பென்னம் பெரிதாக காட்சியளித்துக்கொண்டிருந்த சிங்கள எழுத்துக்களை அழித்து அந்த இடத்தில் தமிழ் எழுத்தை எழுதியதாக சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் சிலர் மீது பொலிசார் வேட்டை நடத்த ஆரம்பித்துள்ளனராம்.

வந்தாறுமூலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை தேடிச்சென்றபோது அவர் கிடைக்காததால் அவரது தந்தையைப் பிடித்துச் சென்று பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

சென்றகிழமை 5 இளைஞர்களை கைது செய்து பின்னர் நால்வரை விடுதலை செய்தனர்.

பொலிசாரின் இந்த அநியாய வலைவிரிப்புக்கு தமிழ்த் துரோகிகளும் பக்கபலமாக இருப்பதாக மட்டக்களப்பு மக்கள் கருதுகிறார்கள்!



895 நாட்கள் சிறைவாசத்துக்குப்பின் இவ்வாரம் விடுதலையாகும் விடுதலை வீரன் மாவை சேனாதிராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். டேவின்,
நறுவிலிக்குளம்.

கே: தமிழ் உணர்ச்சியில்லாத தமிழ் இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்துவதற்கோர் உபாயம் கூறுவீரா?

ப: சுதந்திரனை வாங்கி அவர்களிடம் படிப்பதற்கு கொடுங்கள்!

*

புனிதம்,
புன்னாலைக்கட்டுவன்.

கே: தமிழன் தமிழனாக வாழவேண்டுமானல்...?

ப: அவன் தன்னைத்தானே ஆளவேண்டும்.

*

குப்பிழான் கிளி,
விசுவமடு.

கே: திருவாளர் செ. கு. கிளிநொச்சி பகுதியில் போட்டியிடப் போகிறாராமே?

ப: தன்வினை தன்னைச் சுடும் என்பதை அவர் அப்போதுதான் படிக்கப்போகிறார்!

*

மு. லோகநாதன்,
4/2 சிவநகர், உருத்திரபுரம்.

கே: ஐ. தே. கட்சி தமிழரின் உரிமையை எந்த அளவுக்கு பாதுகாத்துள்ளது.

ப: பாதுகாத்துள்ளதா? 15 இலட்சம் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து, தமிழர் நிலங்களை சிங்களவர்களுக்கு கொடுத்ததே அந்தக் கட்சிதானே!

*

தயா,
தம்பிலுவில்.

கே: அண்மைக் காலத்தில் அநேக நாடுகள் துப்பாக்கி முனையில் சுதந்திரம் பெற்றது. அதேபோல் நாமும் செல்லாமல், ஏன் அஹிம்சை வழியில் செல்லவேண்டும்?

ப: சட்டியில் எதுவும் இல்லாமல் 'சமாராதனை' பற்றி வெறும் வாயளவில் பேசி என்ன பயன்?

*

க. சண்முகராசா,
464, யோகபுரம்.

கே: தமிழர் கூட்டணியில் ஒருசில தலைவர்கள் இன்னும் ஏன் உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள்?

ப: அப்படிப்பட்டவர்கள் உறக்கம் கலைந்து எழாவிட்டால் தமிழர் கூட்டணியாலும் மக்களாலும் தூக்கியெறியப்படுவார்கள். கவலைப்படாதீர்கள்!

*

டி. பேரின்பநாதன்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

கே: 1977ல் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் ஐ. மு. அரசாங்கத்தின் சார்பில் திரு. சி. அருளம்பலம், ஆ. தியாகராசா, துரையப்பா ஆகியோர் தேசிய அரசப் பேரவைக்குப் போவார்களா?

ப: அங்கொடை ஆஸ்பத்திரியின் பெயர்ப்பலகை அப்போது இவர்களுக்கு தேசிய அரசப்பேரவையின் பெயர்ப்பலகை மாதிரி தோற்றமளிக்கும்! எனவே அங்கு போய்ச் சேர்வார்கள்!

*

வ. விக்கினேஸ்வரன்,
கோட் வீதி, பருத்தித்துறை.

கே: ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு வந்தால், தரப்படுத்தல் நீக்கப்படுமா?

ப: இக்கரைக்கு அக்கரை பச்சையே தவிர எல்லாம் ஒன்றுதான்! தனிநாடு நிறுவினாலன்றி எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழன் அடிமைதான்!

*

சி. இரவீந்திரன்,
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

கே: இமயத்தில் புலியும் வில்லும் மீனும் எழுதிய தமிழன் இப்போது என்ன செய்கிறான்?

ப: 'பெட்டிசப்' எழுதிக் கொண்டிருக்கிறான்!

கே: காரணமின்றி சிங்கள அரசு தமிழ் இளைஞர்களை ஏன் சிறை வைத்திருக்கிறது?

ப: தமிழ்த் தாயின் சிறையை உடைக்க அவர்களுக்கு பயிற்சி தருகிறது!

*

ரி. எஸ். பாலன்,
வவுனியா.

கே: தமிழர் கூட்டணியின் கூட்டங்கள் எதுவும் வவுனியாவில் ஏன் இன்னும் நடைபெறவில்லை?

ப: வவுனியா தொகுதி முழுவதும் கூட்டங்களை நடத்துவதற்கு உங்கள் வவுனியா பா. உ. ஏற்பாடு செய்துவருகிறார்!

*

ஜி. தினகரன்,
தலவாக்கெல்லை.

கே: சிங்கள மக்களுடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாதா?

ப: தமிழ் மக்கள் இன்று கோருவது தங்கள் நாட்டுக்குச் சுதந்திரம்! சலுகைகள் அல்ல; நம்முடைய சுதந்திரத்தை நாமே நிலைநாட்டிக்கொள்ள வேண்டுமே தவிர— கூடிப்பேசிப் பெறும் எச்சில் பருக்கையல்ல சுதந்திரம்! சுதந்திரம் என்பது ஒருவர் தர மற்றவர் வாங்கும் பொருளுமல்ல!

*

ஏ. மகேந்திரன்,
கொழும்பு-15

கே: இலங்கைத் தமிழர்களுக்கு நாம் உணவும் அளிக்க முடியாது; உணர்வும் அளிக்கமுடியாது என்று கலைஞர் கருணாநிதி பேசியிருப்பது எதைக் காட்டுகிறது?

ப: தமிழகத்தில் வாழும் 4½கோடி தமிழர்கள் அங்கும் சுதந்திரமின்றி அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதை!

*

சி. பாலச்சந்திரன்,
சுன்னாகம்.

கே: அடுத்ததேர்தலில் கவிஞர் காசி ஆனந்தன் கூட்டணி பிரதிநிதியாகப் போட்டியிடுவாரா?

ப: அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காது அடுத்த சந்ததி சுதந்திரமாக வாழ்வதற்கு செய்யவேண்டிய பணிகளைப்பற்றியே அவர் சிந்திக்கிறார்!

*

ஸ்ரீதரன்,
சந்தர்மடம்.

கே: வானுப்போன ஒவ்வொரு தேர்தலின் பின்னும் மாஸ்கோ போகின்றவரல்லவா? இந்தத் தேர்தலின் பின் ஏன் போகவில்லை?

ப: தமிழ்தேசிய இனத்தின் சுதந்திரக் கோரிக்கைக்கு துரோகம் புரிந்துவிட்டு இவர் அங்குபோயிருந்தால் மாமேதை லெனின் புதைகுழியிலிருந்து எழுந்து இவர் மீது காறியுமிழ்ந்து இருப்பாரே!

*

திருமதி சிவபாக்கியம் அழகர்சாமி,
கொழும்பு-3

கே: மலையக தமிழ் மக்கள் தமது இன்றைய நரக வாழ்க்கையை விட்டு வெளியேறி தமிழ் ஈழமாகிய வடக்கு, கிழக்கில் குடியேற முடியுமா?

ப: தாராளமாக வரவேற்கப்படுகின்றனர்! வளமான நிலம் வாவென்று அழைக்கிறது மலையகத் தமிழ் மக்களை! இதற்குமேல் இது சம்பந்தமாக இதிலே பதிலளிக்க முடியாது!

கேள்வி அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

# ஒரு மலையகத் தொழிலாளி பேசுகிறான்

காடுகள் வெட்டி இங்கே,
களனிகள் ஆக்கினோம்.
தேயிலை, றப்பர், இன்னும்,
தெங்குப் பொருளனைத்தும்,
நாட்டிலே நாட்டி இந்த
நாட்டிற்கே சேவை செய்து,
எலும்பினை உருக்கி அவற்றின்
எருவினை மண்ணில் கூட்டி,
பல்வகைச் செல்வமிங்கே,
பெருகிடப் பணிகள் செய்தோம்.
வெள்ளையனென்ற வீணன் — அதை
கொள்ளையில் கொண்டுசென்றான்.
எல்லையில் நட்ட மிந்த
ஈழத்தை வந்தடைய
அழைத்தவன் எம்மையிங்கே,
அடிமையாய் விட்டுப்போனான்.

*   *   *

வெள்ளையன் எம்மையிங்கே,
வெறுமையாய் விட்டுப்போக,
கொள்ளையர் சிலபேரிங்கே,
கோலினை ஏந்தலானார்.
எம்மையும், எம்மைச்சார்ந்த
ஏழைகள் பலரைச்சேர்த்து
கப்பலிலேத்தி விட்டு,
கரையிலா மகிழ்ச்சி கொண்டார்.
பெற்றவள் இங்கே இருக்க,
பிள்ளைகள் அங்கே போக,
சரித்திரம் கதையாய் போகும்,
சட்டமும் சிலபேர் செய்தார்.
எஞ்சிய சிலபேர்க் கிங்கே,
இருந்த நல்லுரிமை யெல்லாம்,
வஞ்சனையாகக் கவர்ந்தே,
வாழ்வதைக் கெடுக்கலானார்.
உரிமையைப் பறித்த பின்னும் — எம்
உழைப்பினை வேண்டிநின்றார்.
மீண்டும் எங்கள்,
வியர்வைகள் மண்ணில்வீழ,
எஞ்சிய இரத்தமெல்லாம்,
எருவதாய் மண்ணில் சேர,
மாடதாய் உழைத்து நின்றோம்.
மண்ணதன் மலர்ச்சிகண்டோம்.

*   *   *

இனி எமக்கியலாதையா
என்றுநா மிருந்தபோது
பசியது உடலை வாட்ட,
பிணியது மெருகு ஊட்ட,
தெருவழிசென்று நாங்கள்
திரவியம் தேடலானோம்.
உழைப்பினை உண்டவர்கள்,
உறுதியாய் இருக்கும்போது,
உழைத்தவர் நாங்களிங்கே,
உதிரமும் வற்றிப்போக,
களைப்பினை அடைந்ததாலே,
கைகளை ஏந்தலானோம் — இது,
ஆள்பவர் குற்றமா? — இல்லை,
எம்மாலிங்கே,
வாழ்பவர் குற்றமா?
படைத்தவன் குற்றமா? — இல்லை
எம்மையிங்கே,
அழைத்தவன் குற்றமா?

*   *   *

இப்படியாக,
தெருவழி சென்று நாங்கள்,
திரவியம் தேடுகையில்,
எங்களை எடுத்துச்சென்று,
எங்கேயோ எறிகின்றீரே!
நாடுவாழ, நகரம்வாழ,
வீடுகள் எல்லாம் வாழ,
வேள்விகள் செய்து — எங்கள்,
வியர்வையை ஆகுதியாக்கி,
எங்கள் வலிமையெல்லாம்,
இழந்திருக்கின்றோமே?
நாங்களா இந்த நாட்டில்,
நாதிகளற்றவர்கள்?
நாங்களா இந்த நாட்டை
நரகமாய் ஆக்குகின்றோம்?

*   *   *

எங்கள் உழைப்பினை — நீங்கள்
கொள்ளை கொண்டீர்கள்
அதனால் நாங்களிப்போ,
அனாதையாய் தவிக்கின்றோமே?
கொள்ளையர்களே!
நீங்களெப்போ இந்நாட்டின்
நீதிபதி யானீர்கள்!!
இந்த நாட்டை,
பசியிலும், பட்டினியிலும்,
நின்றும் காத்த,
நாங்களா ஏழைகள்?
ஏழைகள் என்று எம்மை,
எங்கேயோ எடுத்துச்சென்று,
எறிகின்றீர்களே!
உங்கள் ஆத்மாவை,
கேட்டுச் சொல்லுங்கள்!!
நீங்கள்,
இந்த நாட்டுக்காக,
இழந்தது என்ன?
துறந்தது என்ன?
நாங்கள் இந்நாட்டுக்காக,
எம்மையே இழந்தோம்.
எம் நாட்டினை,
துறந்தோம்.
எங்களை எடுத்தெறிகின்றீர்களே,
எண்ணிப் பாருங்கள்!
நாங்களில்லாவிட்டால்,
இந்த நாடு,
என்றோ,
நரகமாகியிருக்கும்,
எங்கள் உழைப்பில்,
சொர்க்க சுகம்,
அனுபவிப்போரே,
ஒன்று கூறுகிறேன்,
இன்றில்லாவிட்டால்,
நாளை,
நாளை யில்லாவிட்டால்,
நாளை மறுநாள்,
என்றோ ஒருநாள்,
இதற்குப் பதில்,
நீங்கள்
சொல்லித்தானுகவேண்டும்,
உங்கள் தலைகள் மீது,
நீங்களே
மண்ணை வாரிப்போடுகிறீர்கள்,
எங்கள் கண்ணீர்,
எங்கள் செந்நீர்,
உங்களை,
சும்மாவிடாது.
நினைவில் நிறுத்துங்கள்!
நினைவில் நிறுத்துங்கள்!!

—வாணிதாசன்

# விநோதனுக்கு பாடம் புகட்டினர்!

சமீபத்தில் ஒரு நாள் உடுவில் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கிளையை சிறிமா அம்மையாரின் தொண்டரடி விநோதன் திறப்பதெனவும் அக்கிளை திறப்பிற்கு அரசு சார்பானவர்களே அழைக்கப்படவேண்டுமென்றும் விநோதன் கட்டளையிட்டிருந்தார். உடுவில் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், அலுவலாளர்கள், சிற்றூழியர்கள் ஏனைய பகுதி உறுப்பினர்களைப் போல் அரசாங்கத்திற்காக மட்டும் வால் பிடித்து வயிறு வளர்ப்பவர்களல்லர். இது பகிரங்க இரகசியம்.

உடுவில் ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர், ஊழியர் சிலர் கிளை திறப்பதற்குத் தேசிய பேரவை உறுப்பினரையும் அழைக்கவேண்டுமென விரும்பினர். இதற்கு விநோதன் முடியாது என்று பதிலறுத்துவிட்டார்.

விநோதனின் பிடிவாதப் போக்கை அறிந்த ஊழியர்கள் விநோதனின் செயலை முறியடிக்க விரும்பினார்கள். குறிப்பிட்ட தினத்தன்று விநோதன் திறக்க இருந்த கிளையை விநோதன் திறப்பதற்கு முன்னமே திறந்து சாமான்களைப் போட்டு விற்பனை செய்தனர். அக்கிளையை விநோதன் அன்று திறக்க வேண்டியேற்படவில்லை. பதவி பறிபோனாலும், மரபு, பண்பு காப்பாற்றப்படவேண்டுமென்ற இவ்வூழியர் செயலை இன்று மக்கள் பாராட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்றின் எழுச்சியும்!
# ஆரையம்பதியின் மலர்ச்சியும்!

**அன்பு நண்பா,**

தமிழ் ஈழத்திருநாட்டின் கிழைத்தென் கோடி கிராமங்களில் ஒன்றான அக்கரைப் பற்றுக்கும், ஈழத்தமிழனிடம் பழந்தமிழ் மறவா வீரம்இன்னும்வற்றிவரண்டுவிடவில்லையென்பதற்குஎடுத்துக் காட்டாக விளங்கிடும் வீரர்கள் கோட்டமான மட்டக்களப்பின் ஆரையம்பதி கிராமத்துக்கும் இவ்வாரம் சென்றுவிட்டுத் திரும்பியிருக்கிறேன்! கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் காட்டுகின்ற இதயசுத்தியான அன்பும் ஆர்வமும் விடுதலை இலட்சியத்தில் அவர்கள வைத்திருக்கும் அசையாத உறுதியும் விருந்தோம்பும் பெரும்பண்பும், என்னை அவர்களிடமே மீண்டும் மீண்டும் செல்லும்படி தூண்டுகிறது; அவர்களது அன்பு அழைப்புகளை என்னால் நிராகரித்திட முடிவதில்லை! எனவேதான் ஆர்வமிகுந்த கொள்கை வீரரான அக்கரைப் பற்று 'தாடிக் குருக்களின்' அன்பழைப்பையும், ஆரையம்பதி இளைஞர்களின் ஆர்வமிகுவேண்டுகோளையும் ஏற்று—பத்திரிகை வேலை நெருக்கடிகளும் உடல் நலக்குறையும் ஒருபக்கம் என்னைத் துன்புறுத்தினலும் — அதற்கு மத்தியில், அவர்கள் மூதறிஞர் பெருந்தலைவர் தந்தை செல்வாவுக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் அளித்திட்ட எழுச்சிமிகு வரவேற்புக்களில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பியிருக்கிறேன்!

அக்கரைப்பற்று — தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் அக்கறை கொண்ட வீரமரபினர் வாழுகின்ற அழகுக்கிராமம்! பச்சைப் பசேலென்ற நெல்வயல்களும் பண்பாடு செறிந்த உள்ளங்களும் நிறைந்த கிராமம், வயற்காடுகளில் வளமிகு தமிழ்க் கவிதைகள் பிறக்கின்ற கிராமம்! அரிமா என வாழ்ந்திருந்த அறப் போரணித் தலைவர் அமரர் அரியநாயகத்தின் வழிகாட்டுதலின் கீழ் தலை நிமிர்ந்து நடைபோட்ட கிராமம். தமிழ் ஈழ விடுதலையை உள்ளபடியே நேசிக்கின்ற தமிழ் மக்கள் வாழும் கிராமம்! துணிச்சலும் செயல் திறனும் கொள்கை வீரமும் நிறைந்தவர்கள் அந்த ஊர் மக்கள்! மூதறிஞர் தந்தை செல்வாவின் சுட்டுவிரலசைவுக்கு கட்டுப்பட்ட இலட்சிய வாதிகள் அவர்கள்!

நீண்ட பல நாட்களாக மூதறிஞர் தந்தை செல்வாவை தங்கள் ஊருக்கு அழைத்திட வேண்டும் என்று விடாப்பிடியாக தொடர்ந்து முயற்சிசெய்து வந்த அந்த ஊர் மக்களின் ஆசை மே திங்கள் 3ம் நாள் சனிக்கிழமை நிறைவேறியது! ஆம், தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், உடுவில் பா. உ. வி. தருமலிங்கம், முன்னுள் மூதவை உறுப்பினர் முதியவர் மாணிக்கம், மட்டக்களப்பு உறுப்பினர் செ. இராசதுரை தமிழ் எந்தல் ஈழவேந்தன், திருகோணமலை தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த திருமதி லோறன்ஸ் ஆகியோருடன் நானும் அவர்களது ஆசைப்படி மே 3ம் திகதி — ஒரு முழு நாள் முழுவதும் அக்கரைப்பற்றிலேயே தங்கியிருந்தோம்!

அக்கரைப்பற்று மக்கள் தமிழர் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரையும் மெத்த ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தும், மேற்குறிப்பிட்ட நம்மைத் தவிர வேறு எவருமே அங்கு செல்லாதது அந்த மக்களிடையே எவ்வளவு தூரம் வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளப்பிற்று என்பதை சுட்டிக் காட்டாவிட்டால் நான் எனது கடமையிலிருந்து தவறியவனுவேன்!

இலவச பிரயாண வசதிகளிருந்தும்கூட இத்தகைய இயக்கக் கூட்டங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் செல்லாது—ஆர்வத்துடன் காத்திருக்கும் மக்களையும் ஏமாற்றத்தில் தள்ளிவிட்டு—உடலையும் உள்ளத்தையும் அலட்டிக்கொள்ளாமல் நோகாமல் பதவிகளில் ஒட்டிக்கொள்ள விரும்புகிறவர்கள் எவராக இருந்தாலும், அவர்களை மக்கள் இனியும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள்! தமிழர்கூட்டணியில் இனியும் சோம்பேறிகளுக்கும் இலட்சியத்தில் அக்கறையற்றவர்களுக்கும் துளியும் இடமிருக்கக்கூடாது! இயக்கத்துக்கும் விடுதலை இலட்சியத்துக்கும் தம்மை முழுமையாக தூய்மையுடன் அர்ப்பணிக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே தமிழர் கூட்டணியில் எதிர்காலத்தில் இடமுண்டு என்கிற நிலையை தமிழ் மக்கள் நிச்சயம் ஏற்படுத்தியே தீருவார்கள் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு!

அக்கரைப்பற்று 7ம் குறிச்சியைச் சேர்ந்த அன்பர் மயில்வாகனம் இல்லத்திலும் மற்றும் பல இல்லங்களிலும் கட்டித்தயிரும் கெட்டித் தேனும் வழிந்துஓடஅவர்கள் போட்ட விருந்து இருக்கிறதே—அந்த விருந்து இனித்ததைவிட, அவர்களது சுத்தமான அன்பும் அவர்கள் காட்டிய பரிவும் பாசமும், விருந்தோம்பிய அந்தப் பண்பும்எனக்கு அதிகமாக இனித்தது!

அன்பர் மயில்வாகனம் இல்லத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில், குறிப்பாக அக்கரைப்பற்று மக்களையும்—பொதுவாக அம்பாறை மாவட்டத்தில் வாழுகின்ற அறுபதினுயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களையும் எதிர்நோக்கும் கஷ்டங்கள், தொல்லைகள் சிக்கல்களை அந்த மாவட்டத்து தமிழ் அன்பர்கள் மனம் விட்டு கூறிய போது—உள்ளபடியே என் உள்ளம் பதைபதைத்தது! தமிழினத்தின் தனித்துவத்தைக் காப்பாற்றி—தமிழர் மண்ணைப்பாதுகாத்து—தொடர்ந்து தமிழர்களாக வாழ்வதற்கு நாள்தோறும் அவர்கள் நடத்தி வருகின்ற போராட்டம் புரிந்தது! தமிழர்களாக வாழுவதற்கு—தனித்துவத்தைக் காப்பதற்கு—போராடிவரும் அம்பாறை மாவட்ட தமிழின மக்களுக்கு சகல விதங்களிலும் தமிழர் கூட்டணி முன்னின்று உதவும் என்கிற உறுதிப்பாட்டை இந்த செயற் குழுக் கூட்டத்தில் வைத்து தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் அண்ணன் அமிர்தலிங்கம் அளித்தார்!

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் கிராமங்களுக்கு தமிழர் கூட்டணியின் தலைவர்கள் அடிக்கடி சென்று அவர்களது குறைகளை அறிந்து அவற்றை கூடிய வரை நிவர்த்திக்க முயற்சிக்கவேண்டும்! குறைகளை நிவர்த்திக்கா விட்டாலும் கூட — அடிக்கடி தமிழர் கூட்டணித் தலைவர்கள் அங்கு சென்று திரும்புவது அந்த மக்களுக்கு ஒரு தார்மீக ஆதரவையும் தைரியத்தையும் அளிக்குமன்றோ!

## அரசியல் மேடை

அக்கரைப்பற்று சித்திவிநாயகர் ஆலய முன்றலில் அன்று மாலை நடைபெற்ற வரவேற்புக்கூட்ட மேடைக்கு பனங்காட்டிலிருந்து தந்தை செல்வாவும் காசி ஆனந்தனும ஏனையோரும் காரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட நேரத்தில் — அகமும் முகமும மலர்ந்திட வழியெல்லாம் நிறை குடம வைத்துப், நீண்டமலர் மாலைகள் சூட்டியும் குரவை போட்டும் பெண்டிரும் ஆடவரும் ஆர்வப் பெருக்குடன் எங்களையெல்லாம் வரவேற்ற காட்சி நெஞ்சை நெக்குருகிடச் செய்திடும் காட்சியாகும்!

அன்பர் மயில்வாகனம் தலைமை வகித்திட சம்புநாதப் போடியார் குத்துவிளக்கேற்றிட மங்கையர்க்கரசியார் தமிழ் ஈழத் தேசிய கீதம் பாடிட—செல்வி சௌந்தரி கணபதிப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்திட—கவிஞர் அக்கரைசக்தி வாழ்த்துக் கவிதை பாடிட—அமரர் அரியநாயகம் அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள்—ஆடவரும் பெண்டிரும் அணி திரண்டு வந்திருந்து தலைவர்களின் கொள்கை விளக்கத்தை கேட்டுத் தெளிவு பெற்றனர்! அந்த மக்களின் உணர்ச்சிப்பெருக்கைக் கண்டு நாங்களும் புதிய உணர்வு பெற்ருேம்!

வரவேற்புரை நிகழ்த்திய தங்கை சௌந்தரி கணபதிப்பிள்ளை என் மீது தனக்குள்ள சகோதர வாஞ்சையுடன் ஒரு சிறிய தாக்குதலையும நடத்தினர். 'தாய்க்குலத்தை மறந்து அரசியல் மடல் தீட்டும் அண்ணன் கோவை மகேசன் அவர்களே!'' என்று என்னை அவர் விழித்த போது நான் உள்ளூரச் சிரித்துக்கொண்டேன்! ஏனென்ருல் எனது அரசியல் மடலை நான் நண்பனுக்கு என்று வரைந்தாலும் அதைப்படிப்பவர்களிலே பாதிப் பேர் என்னுடைய அன்புச் சகோதரிகளே—செல்வி சௌந்தரி உட்பட—என்பதை நான் நன்கு அறிவேன்!

அக்கரைப்பற்று மக்கள் எடுத்த விழா இவ்வளவுதூரம் எழுச்சியை தந்தது என்றல்—ஆரையம்பதியின் வீர இளைஞர்கள் தமிழ்த் துரோகிகளின் சதிகளையெல்லாம் முறித்தெறிந்து—வெற்றிகரமாக மே திங்கள் 4ம் நாள் நடத்திய விழா இன்னும் கூடும் சுவையும் அளிப்பதாக அமைந்தது.

அக்கரைப்பற்று மக்களைப் போலவே—ஆரைப்பற்று கிராமத்தின் துடிப்புமிக்க வீர இளைஞர்கள் தந்தைக்கும் காசிக்கும் வரவேற்பு விழா எடுப்பதற்கு நீண்ட நாட்களாகவே துடித்துக்கொண்டிருந்தவர்கள்; பல்வேறு காரணங்களால் அதை நடத்த முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தவர்கள். இறுதி நேரத்திலும் எதிரிகள் போட்ட முட்டுக் கட்டைகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கி இந்த விழாவை வெற்றிகரமாக நடத்தி தாங்கள் செயல் வீரர்கள் என்பதை—அவர்கள் நிரூபித்துக் கொண்டுவிட்டார்கள்!

ஆரைப்பற்றையின் வீரத் தமிழர்கள் அஞ்சா நெஞ்சினர்; ஆண்மையாளர்கள்; அறப் போருக்கு மட்டுமல்ல மறப்போருக்கும் தயாராக இருப்பவர்கள்! அரசியலில் ஆரைப்பற்றுவது என்று தீர்க்கமாகயோசித்து—தமிழர் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியை—தந்தை செல்வாவை — பற்றிக்கொண்டிருப்பவர்கள் இந்த ஆரைப்பற்று மக்கள்! வீரர் கோட்டமான இந்த ஆரைப்பற்றில் — சிங்கம் உறங்கும்போது சிறுநரி புகுந்து விளையாடியது போல—சென்ற தேர்தலின்போது எப்படியோ நுழைந்துவிட்ட — மதனகாம ராஜனை அங்கிருந்து விரட்டியடித்திட காலத்தை எதிர் நோக்கிக் காத்திருப்பவர்கள் அவர்கள்!

தந்தைசெல்வாவுக்கு ஆரைப்பற்றை மக்கள் திட்டமிட்டபடி மே 4ம் நாள் வரவேற்புக் கூட்டத்தை கூட வைக்க விடாமல் தடுத்திட அரசியல் அதிகாரத்தை குருட்டு அதிட்டத்தினுல் தட்டிக்கொண்டு இருப்பவர்கள் அன்றுபகல் வரை நடத்திய சதிகள்தாம் எத்தனை எத்தனை? ஒலிபெருக்கி உபயோகிப்பதற்கு ஏற்கெனவே கொடுத்த உத்தரவை பொலீசாரைக்கொண்டே பறித்திடச் செய்தனர்; அனுரா மட்டக்களப்பில் நிற்பதால் தந்தை செல்வாவுக்கு வரவேற்பு அளித்திடக் கூடாது என்றும் ஒரு புது (அ) நியாயம் பொலிசார் வாயிலிருந்து பிறந்தது; ஆரைப்பற்றில் கூட்டம் நடத்தினுல் இரத்த ஆறு ஓடும் என்று அச்சுறுத்திக்கூடப் பார்த்தனர்!

இதற்கெல்லாம் அஞ்சுபவர்களா ஆரையம்பதி இளைஞர்கள்? அஞ்சாநெஞ்சினரன்ருே அவர்கள்? பட்டம் பதவியைவிட — உத்தியோகத்தை விட தமிழினத்தின் சுதந்திரத்தை நேசிப்பவர்களன்ருே அவர்கள்!

ஆரையம்பதியைச்சேர்ந்த யோகராசா என்ற இளைஞர் தமிழர் தந்தை செல்வாவுக்கு வரவேற்பளிக்க நிதி திரட்டினுர் என்று கூறி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கவேலையிலிருந்து அவரை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்த மாபாவிகள்—தங்களது இந்தப் படு துரோகத்தனத்தை சென்றவார சுதந்திரனில் அவர் அம்பலப்படுத்திவிட்டாரென்பதற்காக நிரந்தரமாகவே அந்தஇளைஞரை வேலைநீக்கம்செய்திருக்கிருர்கள்! ஆனுலும் உத்தியோகத்தை விட உயர்வாக மானத்தைபெரிதாக விரும்புகின்ற தம்பியோகராசா இந்த எலும்பு நக்கிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சிவிடவில்லை! சோர்ந்துவிடவில்லை! இன்றைக்கும் தலை நிமிர்ந்து நிற்கிருர் அந்த தியாக இளைஞர்!

ஆம், தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தில் ஈடுபடுகின்ற தமிழர் கூட்டணித்தொண்டன் எத்தனை கஷ்டங்களை, தொல்லைகளை தன்னுடைய வாழ்வில் ஒவ்வோர் நாளும் சந்திக்கநேர்ந்திடுகிறது என்பதற்கு யோகராசாவுக்கு நேர்ந்த கதி எடுத்துக்காட்டு! இந்த ஒரு யோகராசாவைப் போல இன்னும் எத்தனை யோகராசாக்கள் தமிழர் கூட்டணியிலிருப்பதற்காக அற்பர்களின் ஆட்சியில் நாள்தோறும் பழிவாங்கப்படுகிருர்களோ யார் கண்டார்கள்?

அடக்குமுறை!
அடி உதை!
சிறை!
சித்திரவதை!
பழிவாங்குதல்!
வேலை, தொழில் பறிமுதல்
தலை மறைந்து வாழ்தல்

இப்படி வாழ்வில் எத்தனையோ இன்னல்களைத் தாங்கியபடியே தான் தமிழர் கூட்ட

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வெளிநாடுகளிலும் விடுதலை இயக்கம்!

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியக் கொடுங்கோலாட்சியின் இனப்பாரபட்ச கொள்கையினால் மனமுடைந்து இங்கு வாழ முடியாது — தங்கள் தாய்த் திருநாடான தமிழ் ஈழத்தை விட்டுப்பிரிந்து இங்கிலாந்தில் குடியேறி வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராடுவதற்காக 'ஈழவிடுதலை முன்னணி' எனும் பலம் வாய்ந்த அமைப்பொன்றை இலண்டனில் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக வெளிவந்த செய்தி கேட்டு பூரிப்பும் மகிழ்ச்சியும் அடையாத ஈழத்தமிழன் எவனும் இருக்க முடியாது!

'பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்பதற்கமைய பல்லாயிர மைல்களுக்கப்பால் வாழ்ந்தாலும் — தமிழ் ஈழத்தையும், தமிழ் ஈழ மக்கள் நடத்திவரும் தாயகவிடுதலைப்போராட்டத்தையும் மறந்துவிடாது—இப்புனிதப் போராட்டத்தில் தங்கள் பங்கைச் செய்வதற்கு முனைப்புடன் முன்வந்துள்ள இலண்டன் வாழ் தமிழர்களை — குறிப்பாக ஈழவிடுதலை முன்னணியினரை — நெஞ்சாரப் பாராட்டுகிறோம்! அவர்களது விடுதலைப் பேராவேசம் கண்டு மெய்சிலிர்க்கிறோம்!

ஈழத்தில் வாழும் ஈனத் தமிழர்கள் சிலர்—தங்கள் மொழியையும் மரபையும், தனித்துவத்தையும் தாயகத்தையும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்துக்கு தாரை வார்த்துக்கொடுத்துவிட்டு எச்சில் பருக்கைகளுக்கும் எலும்புத் துண்டுகளுக்கும் அலைந்தாலும் —வெளிநாடுகளில் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகத்தின் விடுதலைப் போராட்டத்தில் இதய சுத்தியுடன் ஈடுபட முன்வந்திருப்பது எமக்கெல்லாம் இனிக்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும்!

தாயக விடுதலை என்பது இலேசான ஒரு விடயமல்ல; ஒவ்வொரு யூதனும் இஸ்ரேல் எனும் தங்கள் தாய்நாட்டை அமைத்துக்கொள்வதற்கு எவ்வளவு உறுதியுடனும் வேகத்துடனும் இயங்கினானோ — அதே போன்ற வேகத்துடனும் உறுதியுடனும் ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் தங்கள் தாய் நாடான தமிழ் ஈழத்தை சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு இயங்கவேண்டிய நேரம் இது!

சுதந்திர ஈழத்தமிழ் நாடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒவ்வொரு ஈழத் தமிழனும் தமிழச்சியும் அவர்கள் எங்கிருந்தாலும், எந்த நாட்டிலிருந்தாலும்—தங்கள் கடமையைச் செய்யவேண்டிய காலம் இது! இன்றைய கால கட்டத்தில் வாழும் ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் — வாழ்வில் தங்களுக்குரிய தலையாய ஒரே பணி தங்கள் தமிழ் ஈழத்தை சுதந்திர நாடாக்குவதே என்பதை உணர்ந்து அந்தப் புனிதமான இலட்சியத்துக்காக தம்மை ஒப்படைத்திட வேண்டும்!

புனிதமான இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்களின்—குறிப்பாக ஈழத் தமிழர்களின் பணி—அதி முக்கியமானது; காத்திரமானது!

உலகில் எந்தெந்த நாடுகள் விடுதலைக்கு போராடி வெற்றியீட்டியிருக்கின்றனவோ — அந்த வெற்றிகளில் பெரும்பங்கு தங்கள் தாயகத்தைவிட்டு வெளியேறி வெளி நாடுகளில் வாழ்ந்து வந்த அந்தந்த நாடுகளின் மக்களுக்கே உண்டு. அண்மையில் நடந்து முடிந்த வங்கதேசப் போராட்டத்தின்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வந்த வங்காளிகள் ஆற்றிய பணி அளப்பரியது!

அதிலும் இங்கிலாந்து—உலக நாடுகளின் தலைவர்கள் அடிக்கடி கூடுகின்ற ஓர் இடம்; உண்மையான சனநாயகம் உயிருடன் வாழுகின்ற நாடு! இங்கிலாந்தில்தான் எத்தனையோ நாடுகள் சுதந்திரப் போராட்டங்களுக்கு உந்து சக்தியும் உலக அபிப்பிராயமும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. விடுதலைப் போராட்டத்துக்கு சாதகமாக உலக நாடுகளின் அபிப்பிராயத்தை உருவாக்கவும் தார்மீக உதவிகள் பெறவும் வாய்ப்புக்கள் நிறைந்த நாடு இங்கிலாந்து!

இத்தகைய நாடான இங்கிலாந்தில் வாழுகின்ற ஈழத்தமிழர்கள்—வாழச் சென்ற இடத்தில் தங்கள் தாயகத்தை மறந்து சோற்றுலடித்த பிண்டங்களாக மாறி சொகுசு வாழ்வு நடத்த முன்வராமல் — தமிழ் ஈழத்தின் அடிமை நிலையைத் துடைத்தெறிந்து விடுதலை ஈழம் கண்டிடும் போராட்டத்தில் — உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு ஓர் முன்னுதாரணமாக — தங்களையும் இணைத்துக்கொண்டிருக்கிறார்கள்!

தமிழ் ஈழ மக்கள்மீது சிங்கள ஏகாதிபத்தியம் கடந்த கால் நூற்றாண்டாக திட்டமிட்டு நடத்திவரும் இன ஒழிப்பு கொடுமைகளையும் — தமிழ் ஈழம் தனிநாடாக இயங்கவேண்டியதன் அவசியத்தையும் — அதன் பழைய வரலாற்றுப் பின்னணியையும் உலக அரங்கில் எடுத்துரைத்து—தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திலுள்ள நியாயத்தை—தர்மத்தை—உலகநாடுகள் ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு நிலையை தோற்றுவிப்பதற்கு உழைப்பதே இலண்டனில் தோன்றியுள்ள 'ஈழ விடுதலை முன்னணி'யின் முதல் பணியாக அமையும்; அமையவேண்டும் என்று கருதுகிறோம்!

இங்கிலாந்தில் வாழும் தமிழர்களின் நம்பிக்கைமிகுந்த உதாரணத்தை பின்பற்றி மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, கனடா போன்ற தமிழர் வாழும் நாடுகள் அனைத்திலும் இத்தகைய இயக்கங்களைத் தோற்றுவித்து தமிழ் ஈழ விடுதலைப் போரில் தங்கள் பங்கினை ஒப்பேற்ற ஆங்காங்கு வாழும் ஈழத் தமிழர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறோம்!

## கருணாநிதியின் எச்சரிக்கை பயனளித்தது!

# இலங்கைமீது இந்திரா தொடுத்த மறைமுகத் தாக்குதல்!

## சிங்கப்பூர் அமைச்சர் இராசரத்தினமும் தமது இனக் கடமையை செய்வாரா?

அண்மையில் ஜமேக்காவில் நடைபெற்ற பொதுநல அரசுகளின் தலைவர்கள் மாநாட்டில் பேசும்போது இனவொதுக்கல் கொள்கைகளைக் கண்டித்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, விருத்தி அடைந்த நாடுகள் இனவொதுக்கல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளை வர்த்தக ரீதியில் பகிஷ்கரிக்கத் தவறுவதை வன்மையாகக் கண்டித்துள்ளார். தமது சம்பந்தப்பட்ட உரையில் மேற்படி வாசகத்தை உபயோகித்தபோது றொடேசியா, தென்னாபிரிக்காவென்று பெயர் குறிப்பிடாது பொதுப்படையாகவே இனவொதுக்கல் கொள்கைகளைக் கடைப் பிடிக்கும் நாடுகள் என்று திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டது அவ்விரு நாடுகளுக்கும் அப்பால் அதே இனவொதுக்கல் கொள்கைகளைக் கைக்கொள்ளும் நாடுகளையும் சுட்டுவதாக அக்கூற்று அமைகிறது.

அண்மையில் சென்னையில் இராஜாஜி மண்டபத்தில் உலகத் தமிழ் இளைஞர் பேரவையால் கூட்டப்பட்ட தமிழ் ஈழத்தின் தந்தை மூதறிஞர் செல்வநாயகம் அவர்களது 78வது பிறந்த நாள் விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் "இலங்கையில் இன்னலுக்குள்ளாகும் தமிழர்க்காக கண்ணீர் வடிப்பதை விடத் தமிழக மக்கள் தலையிட சுயாட்சி உரிமைகூட இல்லாத நிலையில் தாம் இருப்பதாகக் குறிப்பிட்டார். அயல் நாட்டு விவகாரம் என்ற வகையில் இலங்கையில் தமிழர்க்கு அநீதி நேரிடும்போது படையனுப்பத் தம்மால் இயலாவிட்டாலும் தமது போராட்டம் டெல்லிக்கு எதிரானதாக இருக்குமென்றுஞ் சொன்னார். இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைப்பதற்கு திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவுடன் அல்ல திருமதி இந்திராகாந்தி அம்மையாருடனேயே தாம் போராட வேண்டியதாக இருக்கும்" என்றும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டிருந்தார்.

### இன ஒதுக்கல்

அவரது குரல் விழவேண்டிய காதுகளில் விழுந்து தர வேண்டிய பலனை ஏற்கனவே தர ஆரம்பித்துள்ளது. திருமதி இந்திராகாந்தி ஜமேக்கா மாநாட்டில் தென்னாபிரிக்கா றொடேசியா பற்றி குறிப்பாகக் குறிப்பிடாது ஏனைய பிற நாடுகளையும் உள்ளடக்கும் படியாக இனவொதுக்கலைப் பின்பற்றும் நாடுகள் என்று பொதுப்படையாகவே குறிப்பிட்டு, அப்படிப்பட்ட நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் வர்த்தகரீதியில் பகிஷ்கரிக்க வேண்டுமென்று போட்ட போடு தைக்க வேண்டிய இதயத்தில் உறைப்பாகத் தைத்திருக்கிறது. அதனுற்றான் போலும் றொடிசியாவில் இனத் திமிருக்கும் இனவொதுக்கலுக்கும் எதிராக அம்மக்கள் தொடுத்துவரும் போராட்டத்தில் இலங்கை அம்மக்களை ஆதரிக்கும் என்று திருமதி சிறீமாவோ பசப்பியிருக்கிறார் அதே மாநாட்டில்.

அம்மா தாயே முதலில் உனது கண்ணிலுள்ள துரும்பை அகற்றிவிட்டு அயலவரான சிமித் கண்ணுக்கு வைத்தியம்புரிவாயாக இலங்கையில் பட்டினிச் சாமூலம் தோட்டத் தமிழர் இனவொழிப்புக்கு ஆளாகின்றனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழ் மக்களின் தாயகம் பறிக்கப்படுகிறது. மொழி, மத, இன அடிப்படையில் [illegible]த்துறை உள்ளடங்க வாழ்வின் துறைதோறும் தமிழினம் இனவொதுக்கலுக்கு இரையாகின்றது உனது ஆட்சியின் கீழ். றொடிசியாவில் நடத்தப்போகும் இனவொதுக்கல் இனவொழிப்புக்கு எதிரான போராட்டத்தை சிறீமாவோ அம்மையார் இலங்கையிலேயே ஆரம்பிப்பாராக! அப்படிச் செய்வாராகில் மனித உரிமைகள் இந் நாட்டில் மதிக்கப்பட வழி வகுத்த முதல்வராக அவர் விளங்கலாம் எதிர்காலத்தில்.

### நிழல் அரசு

படிப்பது தேவாரம் இடிப்பதோ சிவன்கோவில் என்ற பிரகாரம் உலக மன்றங்களில் மனித உரிமைகள் பற்றி எமது பிரதமரும் பிற அமைச்சர்களும் நிரம்பக் கதை அளக்கிறார்கள். ஆனால் தமது ஆட்சியில் தாமோ மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கிறார்கள். தமிழ் இனம் இனவொழிப்புக்கே இலக்காகியுள்ளது. காலத்துக்குக் காலம் பதவியில் அமரும் கட்சிகள் மேற்படி கொள்கையைத் தமது வசதிக்கு ஏற்ப படிப்படியாக அடக்கமாகவும்—தீவிரமாக வெளிப்படையாகவும் நிறைவேற்றி வந்துள்ளன.

கேட்பாரற்ற இந் நிலையைத் தட்டிக்கேட்க இங்கிலாந்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தோற்றியுள்ளது. சந்தர்ப்பமேற்படின் தமிழ் ஈழத்தின் ஒரு நிழல் அரசை அந்நிய நாடான இங்கிலாந்து நாட்டில் பிரகடனம் செய்யப்போவதாகவும் மேற்படி இயக்கத்தினர் அறைகூவல்விடுத்துள்ளனர். விடிவெள்ளி தோன்றுமா என்று வாடியிருந்தவர்களும் உணர்ச்சியால் உந்தப்படும் காலம் விரைந்து வருவதற்கான அறிவிப்பே இவையாவும்.

### இராசரத்தினம் மனம் வைத்தால்...

ஆனால், தமிழ் ஈழப் பிரச்சினையை உலக மன்றங்களில் விவாதத்துக்கு முன்னெடுத்துச் செல்லும் வாய்ப்பும் தகுதியும் பெற்ற ஒரே நாடு சிங்கப்பூர்தான். நான்கு இனத்தினர் வாழும் அந் நாட்டில் அனைவரும் சமத்துவமாகவும் நான்கு மொழிகளும் தமிழ்மொழி உட்பட அரசாங்க மொழிகளாகவும் விளங்குகின்றன சிங்கப்பூரில். வர்த்தகத்துறையில் இலங்கையின் உறவால் பாதிக்கப்படாத நாடு சிங்கப்பூர். யாழ்ப்பாணத் தமிழர்களின் செல்வாக்குக் கொடிகட்டிப் பறக்கும் காலத்தில் கைகொடுக்காத உறவு பின் எப்போது உதவப் போகிறது? உலக மன்றங்களில் பிரச்சினையை முன்னெடுத்துச் செல்லும் பணிக்கு தன்னைத் தகுதியாக்கிக் கொண்டிருக்கும் சிங்கப்பூர் அரசின் வெளிநாட்டமைச்சர் திரு. இராசரத்தினமும் ஒரு யாழ்ப்பாணத்தவர். சிங்கப்பூர் பிரதமரின் நெருங்கிய நண்பர் கருணாநிதியால் இந்திரா காந்தியை ஒரு வார்த்தையால் உசுப்பிவிட முடிந்தால் திரு. இராசரத்தினம் மனம் வைத்தால் தமிழ் ஈழப் பிரச்சினை நாளையே உலகமன்றங்களில் விவாதிக்கப்படும் பிரச்சினையாக உருமாறிவிடும்.

இலங்கையில் முன்பு பெரிய பெரிய பதவி வகித்தவர்கள் செல்வாக்கோடு வாழ்ந்த நாளில் தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்டு அதற்காகக் காலங்கடந்து இப்போது வருந்திக்கொண்டிருக்கிறார்கள். திரு. இராசரத்தினம் அவர்களுக்கும் அக்கதி நேரிடக்கூடாதென்று பிரார்த்திப்போம்.

உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள் என்று குரல் கொடுத்தவர்கள் இன்று சிங்களத் தொழிலாளரே ஒன்றுசேருங்கள் என்று குரல் கொடுக்கும் காலம் இது. ஆனால், மொழிவழித் தொழிற்சங்கங்களோ ஒருபடிமேற்சென்று இவ்வாண்டு யாழ். நகரில் நடைபெற்ற தமது மேதின ஆர்ப்பாட்ட அணி வகுப்பின் போது உலகத் தொழிலாளரே இனக்கொலை புரியும் இலங்கையைப் பகிஷ்கரியுங்கள் என்று சுலோகித்துள்ளனர். இனவொதுக்கலுக்கு எதிராக உலகத் தொழிலாளர் போராட ஆரம்பிப்பதாயின் தென்னாபிரிக்கா, றொடேசியா மட்டுமென்ன இலங்கை அரசும் வாலைச் சுருட்டும் நாள் விரையவே செய்யும். நான்காவது அகிலத்தினர் செவிகளுக்கு மொழிவழித் தொழிற்சங்கக் கோஷம் எட்டட்டும்.

—திரவியம்.

## தனிநாயக அடிகளார் சொற்பொழிவு!

வண. தனிநாயக அடிகளார் கொழும்பு சரசுவதி மண்டபத்தில் 14-5-75புதன் கிழமை மாலை 6-30 மணிக்கு 'உலகில் தமிழர் பண்பாடு' எனும் பொருள்பற்றி உரை நிகழ்த்தவிருக்கிறார். சுபாமி ஞானப்பிரகாசம்? [illegible] அடிகளார் உரை நிகழ்த்துவார். அகில இலங்கை வர்த்தக ஊழியர் இந்து மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு திரு. கே. சச்சிதானந்தா தலைமை தாங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மே 22- சட்டமறுப்பு ஊர்வலத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில் பங்குபற்ற வேண்டும்!

"தமிழர் கூட்டணி குடியரசு பகிஷ்கரிப்புத்தினமான மே22 நாள் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கும் சட்டமறுப்பு இயக்கத்தில் ஆயிரக் கணக்கில் எதையும் தாங்கும் இதயமுடன் தமிழ் இளைஞர்கள் பங்கு பற்றவேண்டும்! நமது உறுதியையும் விடுதலை வேகத்தையும் எடுத்துக் காட்டிட இது ஒரு நல்ல சந்தர்ப்பம்! பொலிசார் குண்டாந்தடியால் அடித்தாலும் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினாலும் கைதுசெய்தாலும் எந்தத் துன்பத்தையும் அஹிம்சை வழியில் நின்று ஏற்று சட்டத்தை முறிக்க வாருங்கள்!"

இவ்வாறு யாழ்கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் 'மே' நாள் கூட்டத்தில் உரையாற்றிய உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி முழக்கமிட்டார்!



சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜெயக்கொடி மேலும் கூறயதாவது:-

"தமிழர் கூட்டணி 22-ம் தேதி நடத்தும் சட்டமறுப்பு ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கு பற்றி நமது பலத்னை அரசுக்கும் உலகிற்கும் அறியச் செய்யவேண்டும். நமது பலத்தைத எடுத்துக்காட்ட இது நல்ல ஒரு சந்தர்ப்பம். 22-ம் தேதி காட்டும் உற்சாகத்தின் மூலம்தான் நாம் அரசைப் பணியவைக்கமுடியும்.

யாழ்ப்பாணத்தில் விவசாயிகளுக்கு பெரிய பொறுப்பு இருக்கிறது. நாம் தனித் தமிழ் நாடு அமைக்க முற்படும்போது எம்மை பல கஷ்டங்கள் சூழும் பட்டினிச் சாவுகள் ஏற்படலாம். இதற்கு நாம் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் போராட்டம் ஆரம்பித்ததும் அரசு தமிழ் பகுதிக்கு பங்கிட்டு சாமான்களை, உணவுவகைகளை அனுப்பாமல் நிறுத்திவிடும். ஆதலால் வடக்கு கிழக்கில் நாம் உணவில் தன்னிறைவு காணவேண்டும். போராட்டம் ஆரம்பிக்கவேண்டும்.

போராட்டம் ஆரம்பிக்கு முன் தமிழருக்கு தேவையான உணவை, சேமித்து வைக்கவேண்டும். எம்மை பட்டினி போட்டு போராட்டத்தை முறியடிப்பார்கள்.

உணவு, உடை, இருப்பிடம், ஆகியவற்றில் நாம் தன்னிறைவு காணவேண்டும். நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆனையிறவிற்கு அப்பால் சென்று காட்டை வெட்டி உணவு உற்பத்தி செய்யவேண்டும்.

தொழிற்சாலை அமைத்துபலருக்கு வேலை வழங்கலாம். போட்டி போட்டுக்கொண்டு துல்கிரியா துணிகளையும், நைலோன் சாறிகளையும் விட்டு நாம் கதர் உடை அணியவேண்டும். எமக்கு தேவையான உடைகளை, வடக்கு கிழக்கில் உற்பத்தி செய்யவேண்டும்.

ஆடம்பரமாகச் செலவு செய்வதை நிறுத்தி அப் பணத்தை சேமித்து வைக்க வேண்டும். திருமணத்திலும், திருமண விழாக்களிலும் செலவிடும் பெருந்தொகைப் பணத்தைக் குறைக்கவேண்டும். கோவில்களில் 10 திரு விழாக்களுக்கு செலவிடும் பணத்தை சேர்த்து ஒரு திருவிழா செய்வதால் பலன் வந்துவிடாது. இப்பணத்தை எமது போராட்டத்திற்கு உதவவேண்டும்.

### அமிர்தலிங்கம் பேச்சு

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதாவது:

"இந்த ஆண்டு மே தினத்தில் ஒரு தனிச் சிறப்புண்டு. கடந்த காலங்களில் தெற்கிலிருந்து சிங்களத் தலைவர்கள் வந்து இங்கு மே தினம் கொண்டாடினார்கள். இந்த ஆண்டு தெற்கில் மட்டும் தான் சிங்களவர் மே தினம் கொண்டாடினார்கள். ஆளும் கட்சியினரும் சரி யூ. என். பி. யினரும் சரி கொழும்பில் தான் மேதினத்தைக்கொண்டாடுகிறார்கள். வடக்கிலும், மலைநாட்டிலும் தமிழர்கள் தான் மேதினத்தைக்கொண்டாடுகிறார்கள். இதன் மூலம் நாட்டைபிரிக்க வழிகோலப் பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களை ஒரு குடியேற்ற நாடாக அரசு நடத்திவருகிறது. கொழும்புத் துறைமுகத்தில் 75வீதம் தமிழ் தொழிலாளர் வேலை செய்தனர். தேசியமயமாக்கப்பட்டபின் தமிழ் தொழிலாளர் 10 சத வீதம் கூட இல்லை. இதுதான் சோஷலிஸமா? தோட்டங்களில் கருப்பண்ணனுக்கு வேலை கிடையாது. கருபண்டா என்று பெயரை மாற்றினால் தான் வேலை. பொன்னம்மாவுக்கு வேலையில்லை. பொடிமெனிக்கா என்றால்தான் வேலைகொடுக்கிறார்கள். இந்த நிலையில்தான் தமிழர்கள் சுதந்திரத் தமிழ் நாடு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

### பண்டிதர்

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறியதாவது:

"ஈழத்தமிழரின் விடுதலைப் போருக்கு உலகெங்கும் ஆதரவு திரண்டு வருகிறது. லண்டனில 'ஈழத் தமிழ விடுதலை இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'ஈழ விடுதலை' என்ற பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். அதில் ஈழத் தமிழருக்கு விடுதலை காண்பதே தமது லட்சியம் எனத் தெரிவித்துள்ளனர். மலைநாட்டுத் தமிழரின் வாழ்க்கை நிலை பற்றி லண்டனில் டெலிவிஷனில் காட்டப்பட்ட படங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். ஒரு மலைநாட்டுக் குடும்பம் 6 மாதங்களாக மலசலகூடத்தில் வாழ்ந்துள்ளார்கள். மற்றொரு குடும்பத்தில் தந்தையும், தாயும் வாரத்தில் 3 நாட்களுக்கு ஒரு நேரச் சாப்பாட்டுடன்தான் வாழ்ந்தார்கள். இப்படி எந்த னையோ கொடுமைகள் பற்றி 'ஈழ விடுதலை'யில் எழுதப் பட்டுள்ளது.

இம்முறை நாம் எங்கள் தமிழ் நாட்டில் மேதினத்

—8-ம் பக்கம் பார்க்க

## இதன் மூலம் நமது இலட்சிய உறுதியை அகில உலகமும் அறியச் செய்வோம்!"

### தமிழர் கூட்டணியின் 'மே' தின விழாவில் ஜெயக்கொடி அறைகூவல்!

### தமிழர் கூட்டணியின் மேதின ஊர்வல சுலோகங்கள்

| | |
|---|---|
| தமிழ் தொழிலாளியே | ஒன்று சேர் |
| இனவழி பிரிவோம் | மொழிவழி சேர்வோம் |
| தோட்டத் தொழிலாளர் | பட்டினியால் சாவதா? |
| மலையகத் தொழிலாளர் | இன்னல் துடைப்போம் |
| உலகத் தொழிலாளரே | தொழிலாளரைப் பட்டினிபோடும் இலங்கையைப் பகிஷ்கரி |
| யாழ் மாநகர ஊழியருக்குப் | பட்டினிப் படி எங்கே? |
| கூட்டுறவுச் சங்கத் தற்காலிக | ஊழியரே பட்டினிப்படி கோருங்கள் |
| யாழ் மாநகரசபைத் தொழிலாளரே | சுதந்திரக்கட்சி தொழிற்சங்கத்தில் இருந்து வெளியேறு |
| சமசமாஜ சுதந்திரக் கட்சி மாநகர நிர்வாகமே | வெளியேறு |
| தொழிலாளிக்கு வாழ் வளிப்பது | தமிழர் கூட்டணியே |
| மொழிவழித் தொழிற் சங்கம் | வேண்டும் எமக்கு |

## செல்வா-காசிக்கு வரவேற்புக் கூட்டங்கள்!

### காரைநகர்

நாள்:— 10—5—75 சனிக்கிழமை மாலை 5 மணி.

இடம்:— காரைநகர்—சக்கலாவோடை தபால் நிலையத்திற்கு அருகில்.

தலைவர்:— க. செ. வேலுப்பிள்ளை. (மு. கி. ச. தலைவர்)

பேசுவோர்:— தமிழர் கூட்டணித் தலைவர்கள், பிரமுகர்கள், பா. உ. க்கள் தமிழ் இளைஞர் பேரவை, மாதர் பேரவை பிரதிநிதிகள்.

### சித்தங்கேணி

நாள்:— 11—5—75 ஞாயிறு.

இடம்:— சித்தங்கேணி.

பேசுவோர்:— கூட்டணித் தலைவர்கள், இளைஞர்பேரவை மாதர் பேரவை பிரதிநிதிகள்.

### பச்சிலைப்பள்ளி

நாள்:— 12—5—75 திங்கள் மாலை 5 மணிக்கு.

இடம்:— பச்சிலைப்பள்ளி இரட்டைக்கேணி அம்பாள் கோவில் முன்றல்.

தலைமை:— இரா. நாகேந்திரம்.

பேச்சாளர்கள்:— கூட்டணித் தலைவர்கள், பிரமுகர்கள் இளைஞர் பேரவை, மாதர் பேரவை பிரதிநிதிகள். (இதே தினத்தில் சாவகச்சேரி சந்தை மைதானத்திலும் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது.

### ஆவரங்கால்

நாள்:— 13—5—75 செவ்வாய்—மாலை 5 மணி.

இடம்:— ஆவரங்கால் சிவன் கோவில் மைதானம்.

தலைவர்:— பொ. சிவகுரு.

வரவேற்புரை:— க. சின்னத்துரை (புத்தூர் கி. ச. உப தலைவர்)

பேசுவோர்:— தமிழர் கூட்டணித் தலைவர்கள்—பிரமுகர்கள்—மாதர், இளைஞர் பேரவை பிரமுகர்கள்.

நன்றியுரை:— இ. சிவபாதம்.

(இவ்விழா தமிழரசுக்கட்சியின் வெள்ளிவிழாவாகவும் நடத்தப்படுகிறது.)

இதே நாளில் இருபாலையிலும் வர்வேற்புக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது — விபரம் அறிவிக்கப்படவில்லை.

### புங்குடுதீவு

நாள்:— 14—5—75 புதன்.

இடம்:— புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமி கோவிலடி.

தலைமை:— வே. க. சோமசுந்தரம்.

வரவேற்புரை:— எஸ். கே. மகேந்திரன்.

பேசுவோர்:— கூட்டணித் தலைவர்கள் —இளைஞர் பேரவை, மாதர் பேரவை பிரதிநிதிகள்.

### நெடுந்தீவு

நாள்:— 15—5—75 விழாழன் மாலை 5 மணி.

இடம்:— நெடுந்தீவு சந்தை மைதானம்.

தலைமை:— மு. அமரலிங்கம்.

பேசுவோர்:— கூட்டணித் தலைவர்கள்—பிரமுகர்கள்.

### துன்னாலை

நாள்:— 19—5—75 திங்கள் மாலை 5 மணி.

இடம்:— துன்னாலை—நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலய முன்றல்.

தலைவர்:— திரு. பெரியதம்பி.

பேச்சாளர்கள்:— தமிழர் கூட்டணித் தலைவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் போராட்டம்!

புத்தாண்டு பிறந்துவிட்டது. எமக்குப் புது வழி பிறக்குமா?

இப்படி எண்ணியிருந்த உள்ளங்களில் எல்லாம் உவகை·
சிறுவர்கள்,
இளைஞர்கள்,
பெண்கள்,
வயோதிபர்கள்,
எல்லோர் உதட்டிலும் ஒரே சொல் ஒரே பேச்சு.

ஆம்! மீண்டும்போராட்டம்; சட்டமறுப்புப்போராட்டம்!

அடக்கப்படுகின்ற இனத்தின் ஒன்றுபட்ட உரிமைக் குரலாகக்கேட்கிறது! மீண்டும் போராட்டம்.

ஒரு இனத்தின் இருதய கீதத்தை பலாத்காரத்தால் அடக்குமுறையால், ஆணவத்தால் அடக்க நினைக்கும் ஆள்பவர்களை அலறவைக்க மீண்டும்போராட்டம்!

முற்போக்கு என்ற பெயரால் சிறுபான்மை இனத்திற்கு முட்டுக்கட்டைபோடும் ஆட்சி ஆட்டங்காண மீண்டும் போராட்டம்!

பதவி நியமனம், பரீட்சை, பதவி உயர்வு எங்கும் பாரபட்சம் காட்டும் அரசுக்கு ஆப்புவைக்க மீண்டும் போராட்டம்!

பொறுமைக்கும் எல்லையுண்டு என பொறுப்பற்ற ஆட்சிக்குப் புரியவைக்க—வருங்காலம் வளமுடன் வாழ வாழும் இனத்தின் உரிமைப்போராட்டம்!

சுதந்திரம் — தன்மான உணர்ச்சி விடுதலைவேட்கை இவை மீண்டும் தலை தூக்குமா என்று இருந்த நிலையில்—சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் இந்த முரசொலி கேட்கிறது.

நாடாண்ட இனம் மீண்டும் நாடாள குரல் எழுப்புகிறது.

வீறுகொண்ட இளைஞர்களுடைய — அவதியுறும் தாய்மார்களுடைய இந்த ஆர்ப்பரிப்பு திக்கெட்டும் கேட்கிறது.

எமது இந்த எழுச்சி......

இனம் வாழ உயிர்கொடுத்தவர் மத்தியில் உயிர் வாழ மானம் இழந்தவர்கள்—

எம்மைப் பயன்படுத்தி தாங்கள் பதவி, பரிசு, பாராட்டு பெற பாதை வகுத்துக்கொண்டவர்கள்—

குடியரசு நாட்டில் நம் குடிகெடுக்கும் முயற்சிக்கு ஆதரவுகொடுப்பவர்கள்—

இவர்கள்;
எல்லோரையும் மிரட்சிகொள்ள வைத்திருக்கிறது.

அவர்களை;
ஈழத் தமிழினத்தின் இந்த உணர்ச்சியும் சூளுரையும் தொடர்ந்து அலறவைக்கட்டும்.

நம் மத்தியில்;
அங்கும் இங்குமாகத்தோன்றியுள்ள,நாம்சற்றுத் தூங்கிவிட்ட நேரம் தலைதூக்கிக் கொண்ட புல்லுருவிகளை ஒழிக்கட்டும்.

அதோ...

போராட்டப்பாதை நமது கண்களுக்குத்தெரிகிறது. காரிருளினிலே ஒரு ஒளிக்கீற்றுப்போல் வெற்றியும் புரிகிறது.

தொடர்ந்து பூரிப்பும் ஏற்படுகிறது.
இனி தயக்கம் ஏன்?
இந்த எழுச்சிப் பணியே நமது தொண்டாகட்டும்!
வெற்றி ஒன்றே நமது இலட்சியமாகட்டும்!!

—கந்த. ரவீந்திரன்

# சுதந்திரத் தமிழ் நாடு பெறுவதற்குரிய பாதை!

சுதந்திரத் தமிழ் நாடு பெறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மைப் பல வகையில் தயார் செய்ய வேண்டும். மேடைப் பேச்சிலும் எமது சக தோழர்களுடன் பேசுவதிலும்,உணர்ச்சி தரக்கூடிய தலையங்கங்களை தாங்கி பிரசுரமாகும் பத்திரிகையைப் படித்தமாத்திரத்தில் மட்டும் நாம் எமது தமிழ் ஈழத்தைப் பெற்றுவிட முடியாது.

எமது, தமிழர் கூட்டணித் தலைவர்கள் தொடக்கம், தொண்டர்கள், ஆதரவாளர்கள் வரையும் ஒவ்வொருவருக்கும் தியாக மனப்பான்மை, தியாக உணர்ச்சி உருவாகவேண்டும். தமிழ் ஈழமென்று தந்தை செல்வாவால் கோரப்பட்ட வடகிழக்கு மாகாணத்திலுள்ள நிலபுலன்களை நாம் எம்மால் இயன்றளவு பாதுகாக்க வேண்டியது எமது கடமைகளிலொன்றுகும். அரசு தான்தோன்றித்தனமாக தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்டு சிங்களவரை குடியேற்றுகின்றது என்பதால் திருகோணமலை பறிபோகின்றது சிங்களமயமாகின்றது என்று நாம் புலம்புவதில பிரயோசனமொன்றுமில்லை.

திருக்கோணமலையில் இன்று கூட அற்ப பணத்திற்காக தமது நில புலன்களை சிங்களவருக்கு விற்கிறுர்கள், நான் தமிழன் என்று கூறிக்கொள்ளும் சில கீழ் சாதி தமிழன், அரசு திட்டமிட்டுச் செயல்படுவதுடன் சேர்ந்து நாமும் எமது கைக்குள் இருக்கும் நில புலன்களை சிங்கள இனத்திற்கே கொடுக்கிறேம். இந்த நிலை எதிர்காலத்தில் நீடிக்குமாயிருந்தால் எமது தமிழ் ஈழத்தை எப்படி நாம் பாதுகாக்க முடியும்.

திருக்கோணமலையில் சிங்களவருக்கு விற்கப்பட்ட நிலபுலன்களை இவ்விடமுள்ள தமிழர்கள் சிலர் நீதிக்குப் பங்கமில்லாததொகையைக் கோரினர் ஆனுல், அந்த கீழ்ச்சாதி தமிழன் இரண்டு ஆயிரம் வித்தியாசத்தில் தனது மொழியை விற்றுவிட்டான். மாற்றுன் நமது மண்ணை அதிகம் தொகை கொடுத்து மதித்தது. நமது மண்ணில் வைரம் விளையுமென்றநோக்கிலல்ல. தமிழனின் கோட்டையை தகர்த்துஎறிவதற்கு அவர்கள் தீட்டும் திட்டம் இத்திட்டத்திற்கு ஒரு சில தமிழர் தம்மை இரையாக்கிக்கொண்டனர். அற்ப பணத்தை விட்டெறிந்தவுடன் தமிழன் வாயடைத்து விடுவான் என்ற இழிவான வார்த்தைக்கு இலக்காகிவிடாதீர்கள்.

எமது பூமி, எமது மண், எமது இடம், எமது தேசம் என்ற உணர்வினை உச்சரிப்பில் வைக்காமல் உள்ளத்தில் பக்குவமடையுமேயானல் மாற்றுன் எவனும் எமது மண்ணிற்குப் பொருள் கொடுத்தாலும் அல்லது பொன் கொடுத்தாலும் அதில் பொரியாமலிருப்பீர்கள். இதற்குத்தான் இக்கடிதத்தின் முற்பகுதயில கூறினேன் எமக்குத் தியாக உணர்ச்சி வேண்டுமென்று. தியாக உணர்ச்சி இருக்குமாயிருந்தால் எமது மண்ணை இரண்டு ஆயிரம் வித்தியாசத்தில் எமது இனத்தவனை விட்டு, மாற்றுனுக்கு விற்றிருக்க மாட்டார்கள்.

தனது வயிற்றை நிரப்புவதற்காகப் பந்தம் பிடிக்கும் காவடிகளையும் தனது இச்சைக்கு இலக்காகிவிட மாட்டார்களோ என்று வீதியில் திரியும் விஷநாதன்களையும், தமிழனின் தோலை உரித்து றபாணம் அடிக்கவேண்டுமென்று கூறிய இனத்திற்குத் தனது நிலபுலன்களை விற்பவர்களையும் தான் கீழ்ச்சாதி தமிழன் என்று இக்கடிதத்தில் குறிப்பிட்டேன் என்பதை வாசகர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளுங்கள்.

—திருமலை, பவான்.

# மூன்று துரோகிகளுக்கு மூன்று பாலங்கள்!

மட்டக்களப்பின் மூன்று துரோகிகளுக்கு இலங்கை அரசாங்கங்கள் மூன்று பாலங்களைப் பரிசு தந்திருக்கின்றன.

டொனமோர் அரசியல் திட்டத்துக்கு கையெழுத்துப் போட்ட துரோகத்துக்கு தம்பிமுத்துக்கு அரசாங்கம் கட்டிக்கொடுத்தது கல்லடிப்பாலம்!

தேசிய அரசுப்பேரவையில் இருந்து தமிழரசு வெளியேறியதும்—தன்னேடு ஒட்டிக்கொண்டிருந்த தேவநாயகத்துக்கு யு. என். பி. அரசு கட்டிக்கொடுத்தது பனிச்சங்கேணிப்பாலம்!

தமிழினத்தை முற்ருக அழிக்கும் புதிய குடியரசு அமைப்புக்கு கையெழுத்துப்போட்ட துரோகத்துக்கு சிறிமாவோ அரசு கட்டிக்கொடுத்தது (மன்னிக்கவும்—அத்திவாரக் கல் வைத்தது) வலையிறவுப் பாலம்!

—பூ. செல்லத்துரை
பட்டிருப்பு தமிழரசுக்கட்சி செயலாளர்

## அரசியல் மடல்

—3-ம் பக்கத் தொடர்

ணித் தொண்டன் விடுதலைப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறுன்! தமிழ் சமுதாயததுக்காக தன்னுடைய வாழ்வையே அழித்துக் கொண்டிருக்கிறுன்!

இவ்வாறு எத்தனை தொல்லைகள் வந்தாலும் இனத்துக்காக அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்ற இளைஞர்களைக்கொண்ட ஆரையம்பதி இளைஞர்கள் தமிழ் துரோகியின் சதிகளை முறிததெறிந்தனர்; தளபதி அமிர்தலிங்கத்தின் அழுத்தமான எச்சரிக்கைக்குப்பின் பொலிசாரும் பணிந்தனர்; விழா நடத்திட அனுமதியும் வழங்கினர்! ராஜாதிராஜனின் தலைக்கனம் தரைமட்டமாகியது!

மட்டக்களப்பு மாநகரிலிருந்து தந்தை செல்வாவும் நாங்களும் ஆரையம்பதி நோக்கிச் செல்லும்போது கல்லடிச் சந்தியில் துடிப்புமிகு இளைஞர்கள் கூடி நின்று தந்தையையும் காசியையும் வாழ்த்துமுழக்கங்களுடன், எழுச்சிக் கோஷம் இசைத்தபடி வரவேற்ற காட்சியும் — ஆரையம்பதி பரமன் கலைக் கழகத்தில் அப்பகுதி மக்கள பேரெழுச்சியுடன் திரண்டு நின்று அன்பர் கதிரைவேற்பிள்ளை பீ. ஏ. தலையில் உள்ளம் குளிர அளித்த வரவேற்பும் ஆரையம்பதி வைரவர் கோவிலடியில் மக்கள் செய்த உபசரிப்பும் என்றும் மறக்கமுடியாத உணர்ச்சி நிறைந்தனவாகும்!

ஆரையம்பதியின்மூலை முடுக்கெங்கும் தமிழினத்தார் கூடி நின்று மாலை சூட்டியும் வெடி கொழுத்தியும் ஆர்வம் ததும்பிடும் விழியினராய் தந்தை செல்வாவையும் எங்களையும் வரவேற்ற நேரத்தில்—திருஷ்டி பரிகாரம் போல—கூலிக்கு மாரடிக்கும் நாலே நாலு மொட்டையர்கள் ஒரு மூலைக்குள் நின்று தாம் நச்சு மனத்தினர் என்பதை எடுத்துக்காட்டுவதுபோல நீலக்கொடியுடன் காட்சி தந்ததைக் கண்டபோது உள்ளபடியே பரிதாபமாக இருந்தது.

ஆரையம்பதி செல்வா நகரிலுள்ள சிவபெருமான் கோவில் பூபாலபிள்ளை அரங்கத்தில் திரு. சி. பாக்கியராசா அவர்களது தலைமையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்திற்கு எழுச்சியும் உணர்ச்சியும் அலை புரண்டிட திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தை—குறிப்பாக வெட்டிவா என்றல் கட்டிவரக்கூடிய இளைஞர் கூட்டத்தை—எதிரிகள் பார்த்திருந்தால் அவர்களது நாடி விழுந்திருக்கும்!

தந்தை செல்வா அவர்கள் இக் கூட்டத்தில் மணி மணியாக கூறிய வார்த்தைகள் மயிர்க்கூச்செறிய வைப்பவை!

வடமாகாணத்தை விட கிழக்கு மாகாண மக்களையே நான் அதிகமாக நேசிக்கிறேன்! கிழக்கு மாகாண மக்களாகிய உங்களுக்கே இறுதிவரை ஊழியம் செய்ய நான் விரும்புகிறேன்! வட மாகாணத்தில் எட்டு இலட்சத்து 81000 தமிழ் மக்கள் வசிக்கிறுர்கள். அவர்களை அழிப்பது அவ்வளவு சுலபமல்ல. ஆனல் கிழக்கு மாகாணத்திலே இரண்டரை இலட்சம் தமிழ மக்களே வாழுகிறீர்கள். உங்களை சுலபமாக அழித்துப்போடலாம் என்று சிங்கள அரசாங்கம் திட்டம் போட்டு வேலை செய்கிறது — எனவே பலத்தில் குறைந்த உங்களுக்கு ஊழியம் செய்து கிழக்கு மாகாணத்தில் தமிழினத்தை அழிவிலிருந்து காப்பதற்காக உங்களுடன் சேர்ந்து நான் சாகும் வரை போராடுவேன்!

இவ்வாறு தந்தை செல்வா கூறியபோது உள்ளம் சிலிர்த்தது! ஆம், அந்த முதிய சிங்கம் சிங்கள சிறீயை அழித்து சிறையிருந்ததும் மட்டக்களப்பில்தான் என்பதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்!

தந்தைசெல்வா அவர்களைப்போல ஒவ்வொரு தமிழர் கூட்டணித் தலைவரும் தொண்டரும் கிழக்கு மாகாணத்தின் மீது விசேட அக்கறையெடுத்து சுறுசுறுப்புடன் பணிபுரிய முன்வராவிட்டால், சிங்கள ஏகாதிபத்தியம் தனது கையாட்கள் கங்காணிகளான தமிழ் துரோகிகளின் உதவியுடன் தமிழ் ஈழத்தின் பொருளாதாரச் சுரங்கமான கிழக்கு மாகாணத்தைத விழுங்கி ஏப்பமிட்டு விடும்! அந்த அளவுக்கு சிங்கள ஏகாதிபத்தியம்கிழக்கைசிங்கள மயமாக்கத்திட்டமிட்டு வேலைசெய்து வருகிறது! இந்த உண்மையை தமிழர் கூட்டணித் தலைவர்கள் உணர்ந்து துடிப்புடன் செயலாற்றவேண்டும்!

மட்டக்களப்புக்கு நாம் இந்தத் தடவை சென்றிருந்தபோதும் சரி — இதற்கு முன்னரும் பலதடவைகளில் சென்றிருந்தபோதும் சரி—நம்மை வரவேற்று உண்டியும் உறையுளும் தந்து உபசரித்திடும் மாணிக்கம் குடும்பத்தினரை என்னல் மறந்திடமுடியாது! இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு என்பதற்கு இலக்கணமாக வாழும் முதியவர்களான மாணிக்கம் தம்பதிகளும் இளையவர்களான சாம்—கலா தம்பதிகளும் கைமாறு கருதாது இயக்க உணர்வுடன் மனங்கோணுது வரவேற்று உபசரித்து உணவும் உறையுளும் தந்து மட்டக்களப்புக்கு செல்லுகின்ற தமிழர் கூட்டணித் தலைவர்களையும் தொண்டர்களை எந்நாளும் ஒம்பும் அவர்களது தமிழ் பெரும் பண்பாட்டினையும் குடும்பட பாங்கினையும் எந்நாளும் என்னல் மறந்திட முடியாது!

நண்பா, அக்கரைப்பற்றும், ஆரையம்பதியும் தந்திட்ட எழுச்சி தொடரட்டும்! இயக்கக் கருத்துக்கள் அங்குமேலும் பரவட்டும்! இளைய தமிழ் சமுதாயம் தலைநிமிர்ந்து நடைபோடட்டும்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழன் கலந்துகொள்ளத் தடையா?

விளையாட்டுத்துறையிலும் தமிழ் ஈழமும், தமிழரும் புறக்கணிக்கப்படுகின்றனரா? எதிர்வரும் யூனில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கிரிக்கெட் ஆட்டத்திற்கான உலகக் கிண்ணப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் திறமை அடிப்படையில் அல்லாது இனவாத ரீதியில் தெரிவுசெய்யப்படுவதாக ஏற்கனவே ஆட்சேபனைகள் கிளம்பியிருப்பதாக கொழும்பில் இருந்துவெளிவரும் தமிழ் நாளேடான வீரகேசரியில் ஒரு செய்தி வெளிவந்துள்ளது தெரிந்ததே!

மேற்படி இலங்கைக்கோஷ்டியில் திறமை அடிப்படையில் தகுதியுள்ள தமிழ் வீரர் இடம்பெருமையைக் கண்டித்திருக்கும் 12-4-75 ஆம் திகதிய ஈழநாடு ஆசிரியர் தலையங்கம் அதன் நிமிர்த்தம் லண்டனில் எதிரொலி கிளம்புவதையோ அல்லது சர்வதேச ரீதியில் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படுவதையோ தனது மழுப்பல் வாதத்தால் பிரச்சினையையே மங்கச்செய்கிறது. பிரச்சினையில் தலையிடுபவர் பேரில் அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் புத்திவேறு கூறியுள்ளது.

விளையாட்டுத் துறையில் இனவொதுக்கல் இடம்பெற்றாலும் தேசிய ஒருமைப்பாடு காரணமாகப் பிரச்சினை சர்வதேச ரீதியில் கிளப்பப்படக்கூடாதென இலங்கைத் தமிழ் வாசகர்களுக்குப் புத்தி கூறும் ஈழநாடு இன்று அதே இனவொதுக்கல் கொள்கைக்காக தென்னாபிரிக்கா சர்வதேச விளையாட்டுகளில் இருந்து பகிஸ்கரிக்கப்படுவதும் தவறென்று சுட்டுமா? ஆசிய ஆபிரிக்கா, கூட்டுச்சேரா நாடுகள் அனைத்தினதும் ஏகோபித்த பொது அபிப்பிராயம் காரணமாகவே தென்னாபிரிக்கா இன்று விளையாட்டுத்துறை

## ஸ்கொத்லாந்து வீரர்களுக்குள்ள தனித்துவம் தமிழ்ஈழ விளையாட்டு வீரர்களுக்கும் வேண்டும்!

யில் பகிஷ்கரிக்கப்படுகின்றது.

தென்னாபிரிக்காவுக்கு ஒரு நியாயம் இலங்கைக்கு ஒரு நியாயம் என்பதுதான் ஈழநாட்டின் கருத்தா? இனவொதுக்கல் எப்போது விளையாட்டுத் துறையில் தலைகாட்டுகிறதோ அது எங்கிருந்து வரினும் அது அப்போதே கண்டிக்கப்படவேண்டும்.

பாரத நாட்டின் கிரிக்கெட் கோஷ்டிக்கு, பல்வேறு இன மக்களைக்கொண்ட அந்நாடு ஒரு தமிழரான வெங்கட்ராகவனைத் தலைவராகவே தெரிவு செய்திருக்கையில், திறமை அடிப்படையில் கோஷ்டியில் தானும் இலங்கையில் தமிழர் இடம்பெற முடியாத தாயின் பின் தேசிய ஒருமைப்பாடு வெறும் ஏட்டுச்சுரைக்காயே! கறிக்கு உதவாத ஏட்டுச் சுரைக்காயால் பயனேது!

பிரித்தானியாவில் நிலவுவதும் ஒற்றை ஆட்சியே. அப்படியிருந்தும் சர்வதேச போட்டிகளில் பிரித்தானியாவில் ஒரு அங்கமான ஸ்கொற்லாந்து தனித்துவமாகக்கலந்துகொள்ள முடியுமாயின் அப்படியான ஒரு, ஏற்பாட்டையாவது இங்கும் கைக்கொள்ளலாம் தானே! அரசியலில் தமிழ் ஈழம் தனியரசாகவோ, சுயாட்சிப் பிரதேசமாகவோ இல்லாவிட்டாலும் தற்போதைக்கு விளையாட்டுத் துறையிலாவது திறமையுள்ள தமிழ் வீரர் ஒதுக்கப்படாதிருக்க பிரித்தானியா ஸ்கொற்லாந்தை அனுமதிப்பது போன்ற ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ளவேண்டும்.

தமிழரும் தமிழ் ஈழமும் விளையாட்டுத்துறையில் ஒதுக்கப்படாதிருக்க எஞ்சியுள்ள ஒரே மார்க்கம் அதுதான்.

— திரவியம்

# தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே!! தாயக விடுதலைப்போரில் உன் பங்கென்ன? சிந்தித்துப்பார்! செயற்படு!

தமிழ்ப் பெண்ணே!

உன்னை எண்ணிப்பார்! உன்வரலாற்றைத் திருப்பிப் பார், நீ உயர்ந்து நின்றாய்; தமிழகம் உயர்ந்து நின்றது. நீ வீரத்தோடு வாழ்ந்தாய்; தமிழர் கொடி இமயத்தில் பறந்தது. தமிழ்த் திருநாட்டிற்காய்ப் போராடிட எத்தனையோ வீரர்களைத் தந்தாய்! போர்க்களத்தில் தோல்வியோடு திரும்ப உன் கணவன் அஞ்சுவான்—நீ அவனைக் காண மறுப்பாய் எனபதால் நீ தாய்த் திருநாட்டின்மேல் — தமிழகத்தின்மேல் கொண்டிருந்த பாசம்—பற்று உன் சொந்த பந்தங்களுக்குச் சற்றும் கிட்டநில்லா! அதனால்தான் போர்க்கழத்தில் உன் கணவனும் மூத்தவனும் வீரசுவர்க்கம்போக இளையவனைக் கழத்திற்கு அனுப்புகிறாய்!

'முதுகில் வேலா!' என்று, முலையறுக்கமுடிவெடுத்த நீ இளையவன் மார்பில் வேல் கண்டு களிக்கிறாய்—ஈன்ற பொழ்தினும் பெரிதுவக்கிறாய். உன் வீரத்தை, தாய் நாட்டின்மேல் நீ அன்று கொண்டிருந்த பற்றை, நாட்டைக்காக்க நீ செய்த அரும் பெரும் தியாகங்களையெல்லாம் எப்படி நாம் மறக்க முடியும்?

ஆனால்—

இன்று,

நீ தாழ்ந்தாய்! தமிழகம் தாழ்ந்தது!

என்ன! பார்க்கிறாய். நான் கூறுவது தவறா?

ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்பதை மறுப்பாயா? ஆம்! அன்று தமிழகம் ஆனது உன்னால் தான்.

இன்று அது அழிவதும் உன்னலதான!

ஏ! பெண்ணே! நெஞ்சில் கைவைத்துச் சொல்! எத்தனை தமிழ் இளைஞரைக் கோழையாக்கினாய்? சொல்! உனக்காக உன் அன்பு வார்த்தைக்காக, தமிழர் விடுதலைப் போராட்டப் பாதையை விட்டு விலகியோர் எத்தனைபேர்? உன் சுயவாழ்கைக்காக—சொந்த நலனுக்காக எத்தனை வீர இளைஞரை மாய வலையில் வீழ்த்தினாய்?உன் பிடிவாதத்திற்குப் பலியாய்,' நீ கொணர்ந்த பெரும் சொத்தில் ஒரு வெள்ளைச் சல்லிகூடத்தரமறுத்து — அதுதான் போகட்டும் எவ்வித ஒத்துழைப்பும் கொடுக்க மறுத்து, மூஞ்சையைத் தொங்கப்போட்டபடி நீ தடைபோட—அதனால் மனமுடைந்து கிடக்கும் தமிழ்த் தலைவர்கள் எத்தனைபேர்? தமிழ்ப் பெரியோர்கள் எத்தனைபேர்! பதில் சொல்.

அரசின் கெடுபிடிகளுக்கு மத்தியில், வேறு எத்தனையோ சிக்கல்களுக்கு மத்தியில் உன் அன்பை வேண்டி நாடிவரும்—விடுதலை வீரனிடம் 'அரசியலை விடுங்கள் நீங்கள் உப்படித்திரிந்தால் என்கதி என்னுவது?' என்று கேட்டு வெடிக்கிறாய்.

நெற்றியில் இரத்தத்திலகமிட்டு கையில் வேலுடன் வாளும்கொடுத்து, 'வெற்றி இன்றேல் வீர மரணம்' என்று அனுப்பினாய் அன்று! அந்த நாளை நீ திரும்ப வரவழைக்கமாட்டாயா? நீ நினைத்தால் நிச்சயமாக அந்த நாள் வந்தே தீரும்! அந்த நாள் மட்டும் வந்துவிட்டால்... தமிழன் வெற்றி...? சொல்லத்தான் வேண்டுமா?

ஆ! உன்திறமை உனக்கே தெரியவில்லை!

நீ நினைத்தால்...

எட்டப்பனை கட்டப் பொம்மன் ஆக்க முடியும்!

காக்கை வன்னியனைச் சங்கிலியன் ஆக்கமுடியும்!

என்ன! மலைக்கிறாய்!

முடியாதா?

இன்று கேட்கிறாய் உனக்கு வரப்போகும் மாப்பிள்ளை—'முன்பின் அறியாத அவர்—'அவர் என்ன வேலை?' 'ஆ!' "அவரா? கட்டடக் கலைஞர். அவரைக் கேட்டுத்தான் அரசாங்கமே நடக்கிறது." திடுப்பென்று திருமணம் நடக்கிறது. அப்புறம் கறுவாக்காடுதான்! பெண்ணே, என்ன சிரிக்கிறாய்? சிரிக்கவேண்டிய நேரமா இது?

தரப்படுத்தல் — தமிழர்களுக்கு அநியாயம் என்கிறாய், குடியேற்றத்திட்டம் குடிகெடுக்கும் திட்டம் என்கிறாய். சிங்களம் மட்டும் சட்டம் செந்தமிழைக் கொலைக்கழத்திற்கு அனுப்பும் திட்டம் என்கிறாய், பௌத்தத்திற்கு முதலிடம் அதன் வளர்ச்சி ஏனைய மதத்தவரின் வரிப்பணத்திலா என்று குமுறுகிறாய்! கொந்தளிக்கிறாய்!

ஆனால்...

இனியும் ஆனல் வேண்டாம்! இவற்றில்கெல்லாம் முடிவுவேண்டும்! உலகத்தில் ஒரு இடத்தில் ஆவது—ஒரு சிறு தீவிலாவது எமக்கு ஒரு நாடு அமைக்கப் புறப்படு! அப்பொழுதுதான் ஐ. நா. சபையில் எம்மினத்தின் குரல் ஒலிக்கும். நாம் நாடமைப்பது இலங்கையிலேயே அதிகம் சாத்தியம் என்பதை நீ புரிந்திடு! வீர இளைஞரை ஆக்கித்தா! உன் இரத்தத்தால் மட்டுமல்ல! உன் உள்ளத்தால்! சிந்தும் மொழியால்! திருமணப்பேச்சின்போது — 'அவர் என்ன வேலை?' என்று கேட்கும் உன்வாய், தமிழிற்கு என்ன செய்தார் என்று கேட்கட்டும்! 'வைத்தியக் கலாநிதி, பொறியியல் நிபுணன்' என்று கேட்டால் திருப்தியடையும் உன் மனம் 'தமிழிற்காய் சிறைசென்றான்' என்று அறிந்து மகிழட்டும் 'எவளவு சம்பளம் எனக்கேட்கும் வாய்?' எத்தனை நாள் சிறை இருந்தார், எத்தனை முறை சிறை சென்றார் என்று கேட்கட்டும். நாட்களின் எண்ணிக்கை—முறைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு உன்னை மகிழ்விக்கட்டும்! தமிழ் இன விடுதலைக்காய் போராடும் இளைஞன் ஒருவனையே மணம் செய்வேன் என முடிவு செய் விடுதலை அண்மித்துவிடும்! தமிழ் ஈழம் நிச்சயம்கிட்டும்!

—அளவை, குமாரன்.

# துரோகப்பரின் கொட்டத்தை அடக்கினர் கொழும்புத்துறை இளைஞர்!

சித்திரைத் திங்கள் 18ம் நாள் மூதறிஞர் தந்தை செல்வாவுக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் கொழும்புத்துறையின் வீரவாலிபர்களால் ஓர் வீர வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் இதை அறிந்த துரையப்பா வரவேற்பை முறியடிக்க ஏவிய அஸ்திரங்கள், காவிய பெட்டிசங்கள் ஏராளம். ஆனால் அவை எல்லாம் வீரவாலிபர்களின் உணர்ச்சிக்கு முன்பு தவிடு பொடியாகியது.

கொழும்புத்துறையை தன்னுடைய கோட்டை என்றும் தன்னுடைய வீடு என்றும் எத்தனையோ தடவை துரையப்பா பேசியுள்ளார். அவரின் கணக்கு எப்போதும் தப்புக் கணக்குத்தான் என்பதை 18-4-75 வரவேற்பு மக்களுக்கு உணர்த்தியுள்ளது. எங்கே கூட்டம் நடைபெற்றால் தன்னுடைய குட்டெல்லாம் வெளிவந்து விடுமேயென்ற துரையப்பா தன்னுடைய ஏவல் நாய்களை அனுப்பி கையெழுத்து வேட்டையும் நடத்தினர். கூட்டம் வைத்தால் [illegible] என்று. ஆனால் பதின்மூன்று துரோகிகளைத் தவிரவேறு யாரும் கையெழுத்துப் போட மறுத்துவிட்டனர்.

இதனால் மன மொடிந்த துரையப்பா எப்படியாவது கூட்டத்தைக் குழப்பவேண்டும் என்று தனது காவல் நாய்களுக்கு கட்டளையிட்டு அதற்கான செலவையும் ஏற்றுக்கொண்டாராம். ஆனால் புத்திசாலி நாய்கள் ஓடி ஒளிந்திட இரண்டு நாய்கள் தான் வலையில் விழுந்தது. இரண்டும் கொழும்புத்துறை மக்களால் ஒதுக்கப்பட்ட வெறுக்கப்பட்ட ஜீவன்கள் மட்டுமல்ல கடவுளாலும் கைவிடப்பட்டவர்கள். ஒன்று முன்னாள் கிரிமினல் குற்றவாளி மற்றவர் அறிவோ இல்லாது உத்தியோகம் பார்க்க வெளிக்கிட்ட பக்கிரி. இவர் இலங்கையில் ஏற்படுத்திய சாதனை S. S. C. பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் குண்டடித்தமை. துரையப்பாவின் ஆட்சியில் உத்தியோகம் பார்ப்பவர்.

இந்த இருவரும் சில சில்லறைச் சேஷ்டைகள் விட்ப்பார்த்தனர். ஆனால் அமிரின் சாட்டை அடியும் ஆலாலுவின் வீரமுழக்கமும், காசி ஆனந்தனின் சிம்ம கர்ஜனையும் வீர வாலிபர்களின் போர்க்கோலத்தையும் கண்டு ... ஈனத் தமிழனின் பிரதிநிதியாகிய இருவரும் ஓடி ஒளிந்தனர். மறுநாள் அவர்களின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் மறுத்துவிட்டாராம் துரையப்பா. ஏனென்றால் எல்லாரும் என்னை ஏமாத்துகிறார்கள். நான் என்ன ஏமாளியா அல்லது கோமாளியா என்று கொதித்து விழுந்தாராம். முடிவு தானும் ஒரு பெரிய கூட்டத்தைப்போட்டு ஊர்வலம் வைச்சு பெரிய பேச்சாளர்களைப்போட்டு பேசப் போகிறாராம்.

இதற்காக சங்கக்கடை மனேஜர்களிடம் இப்பவே அட்வான்ஸ் கேட்கிறாராம். ஆனால் இந்தப் பயறெல்லாம் இனி கொழும்புத்துறை மக்களிடம் அவியாது என்பது கூட்டம் வைத்ததும் தெரிந்துவிடும்.

—ஜெகம்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டமறுப்புத் திட்டம் பரம...

—1-ம் பக்கத் தொடர்

விடுத்துள்ளது தெரிந்ததே. இந்த இரு நாட்களையும் தமிழ் மக்கள் ஏன் துக்க தினங்களாக அனுட்டிக்க வேண்டுமென்பதை விளக்கும் விரிவான துண்டுப்பிரசுரமொன்றையும் தமிழர் கூட்டணி இந்த வாரம் வெளியிடுகிறது. இந்தத் துண்டுப் பிரசுரங்களை தமிழர் கூட்டணித் தலைவர்கள் கடைகடையாக தாங்களே நேரடியாக விநியோகிப்பார்கள்.

### மே 21, 22ம் நாட்களில்-

● தமிழ் ஈழத்திலுள்ள கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், தொழில் நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி வையுங்கள்!

● மாணவ, மாணவிகளே, பாடசாலைகளை பூரணமாக பகிஷ்கரியுங்கள்!

● அரசாங்கம் நடத்தும் குடியரசு தினக்கொண்டாட்டங்களில் பங்குபற்றுதீர்கள்—வேடிக்கை பார்க்கவும் அங்கு செல்லாதீர்கள்!

● பாடசாலைகளில்நடைபெறும் குடியரசுதின நிகழ்ச்சிகளில் மாணவ மாணவியரே, ஒருவரும் பங்குபற்றுதீர்கள்!

● திரைப்பட மாளிகைகளுக்கு செல்லாதீர்கள்!

● அரசாங்க வாகனங்களில் பயணம் செய்யாதீர்கள்!

இவ்வாறு தமிழ் மக்களிடம் ஒவ்வொரு கூட்டங்களிலும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துவருவதுடன், 22ம் நாள் நடைபெறும் சட்ட மறுப்பு ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் பங்குபற்றும்படியும் அறைகூவல் விடுத்து வருகின்றனர்.

முன்னெப்போதுமில்லாத அளவில் இந்த ஆண்டு குடியரசு தின பகிஷ்காரம் உக்கிரமாக தமிழ் ஈழத்தில் அனுட்டிக்கப்படவிருக்கிறது.

### மே 22 - சட்டமறுப்...

—3-ம் பக்கத் தொடர்

தைக் கொண்டாடுகிறோம். சிங்களவர் தங்கள் நாட்டுத் தலைநகரான கொழும்பில் கொண்டாடுகிறார்கள். கொழும்பில் ஆளும் இனத்தினர் கொண்டாடுகிறார்கள். இங்கு அடிமைகள் கொண்டாடுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

இந்த நாட்டை விட்டு துரோகிகள் ஓடும் நிலைவெகு விரைவில் ஏற்படும். வியட்னாமில் அமெரிக்கர்களுடன் சேர்ந்து பல தென் வியட்னாமியரும் ஓடுகிறார்கள். அந்த நிலை இங்கும் விரைவில் ஏற்படத்தான்போகிறது.

திருவாளர்கள் முத்துசுப்பிரமணியம், தம்பு கந்தையா நா. பாலசுப்பிரமணியம் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினார்கள்.


### ''யோகக் கலை''

''சளைக்காது, அதிகவேலை, அதிகப்படிப்பு, அதிக சிந்தனை செய்ய உதவுகிறது.''

—யோகாசனப் பயிற்சி.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ''யோகக்கலை'' என்ற சிறந்த புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


## பொலீஸ்துறை பதவி உயர்வுகளில் தமிழர்களுக்குப் பாரபட்சம்!

### சிங்கள் சோசலிசத்தின் கோர தாண்டவம்!

**சோசலிசமாம் சோசலிசம்..!**

சோசலிசம் என்ற பெயரில் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய வெறியாட்சி நடைபெற்று வரும் இந்நாட்டில் பொலீஸ், இராணுவம் போன்ற பாதுகாப்பு அணிகளுக்கு ஆட்களையெடுப்பதில தமிழர்கள் ஒதுக்கப்படுவது தெரிந்ததே. இதோ அண்மையில் பொலீஸ் பகுதியில் தமிழர்களுக்கு நடைபெற்ற பாரபட்சம்!—

பொலீஸ் கான்ஸ்டபிள் நிலையிலிருந்து 270 பேர் அண்மையில் 'சார்ஜண்ட்' ஆக பதவி உயர்த்தப்பட்டனர். இந்த 270 பேரில் தமிழர் ஆக 13 பேர்—முஸ்லிம் ஆக 4 பேர்! மீதி 253 பேரும் தனிச் சிங்களவர்களே!

சார்ஜண்ட் நிலையிலிருந்த 21 பேர் சப் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்த்தப்பட்டனர். இப்படிப் பதவி உயர்வு கிடைக்கப்பெற்ற 21 பேரும் தனிச் சிங்களவர்களே. மருந்துக்குத்தானும் ஒரு தமிழனுக்கோ முஸ்லிமுக்கோ சப் இன்ஸ்பெக்டர் பதவி கிடைக்கவில்லை.

பொலீஸ் படையிலுள்ள தமிழர்களும் தங்கள் இன உரிமைகளுக்காக போராடியே தீரவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது!

## இ. தொ. கழக கூட்டம்!

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் அட்டன் மாவட்டக் குழுக் கூட்டம் எதிர் வரும் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டன் அலுவலகத்தில் நடைபெறும்.

புதிய வருட உத்தியோகத்தர் தெரிவு, கழக வளர்ச்சி, கூட்டணியில் கழகத்தின் நிலை தமிழ் இளைஞர்பேரவை தமிழ் மகளிர் பேரவை கிளைகள் அமைத்தல் ஆகியன பற்றி அன்று ஆராயப்படும்.


**கெயிட்டி 3-வது வாரம்**



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

**பொண்ணுக்கு தங்க மனசு**

டைரக்ஷன்: தேவராஜ்—மோகன்.

**4-வது ஜனத்திரள் வாரம் செல்லமகால்**

நடிகர்கள்:

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன் - எஸ் வி. ராமதாஸ், வி. கோபால கிருஷ்ணன் - ஜெஸ்டின்-சாண்டோ, எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர்.

நடிகைகள்:


கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

தேவர் பிலிம்ஸ்

**நல்ல நேரம்**

(ஈஸ்ட்மென் கலர்)



**5-வது வெற்றி வாரம்!**

**கிங்ஸ்லி — பிளாஸா — வெலிங்டன்** யாழ் நகர்

வீட்டுக்காக மட்டும் வாழாமல், நாட்டுக்காகவும் வாழ்ந்த, ஒரு நாடக நடிகரின் வரலாறுதான்



நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா, நம்பியார். வி. கே. ராமசாமி, மனோரமா. சசிகுமார், டி.கே. பகவதி. குமாரி பத்மினி

—நடித்த

சித்ரமாலா கம்பைன்ஸ் அளிக்கும் குகநாதனின்

**ராஜபார்ட் ரங்கதுரை**

(ஈஸ்ட்மென் கலர்)

கெப்பிட்டல் **கோமாதா என் குலமாதா** 15வது வாரம்

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1975ம் வருடம் மே மாதம் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org